கோகுலம்


குழந்தைகள் பத்திரிகை

10-11-1974

50 காசு



யூகோபாங்கின் உதவிக் கரம்-



இப்பொழுது உங்கள் டெபாஸிட், 14% அதிகமாக பயனுடைய வடடியைப் பெற முடியும்


உங்கள் சேமிப்புகளை வளர்க்க விரும்பினால் யூகோபாங்க், எல்லா வாய்ப்புகளையும் வழங்குகிறது. இப்பொழுது உங்கள் ஃபிக்ஸட் டெபாஸிட் வட்டியை, ரெக்கரிங் டெபாஸிட் திட்டத்துடன் இணைப்பது மூலம் 14%க்கும் அதிகமான பயனுடைய வட்டியைப் பெற முடியும். அல்லது உங்களது டெபாஸிட்டை எங்களது கேஷ் டெபாஸிட் ஸர்டிஃபிகேட் திட்டத்தின் மூலம் 15 வருடங்கள் பூர்த்தி ஆன பிறகு நான்குமடங்குக்கு மேல் அதிகப்படுத்திக் கொள்ளலாம். வட்டி வருமானமோ 28%க்கு மேல்!

இவை தவிர, எங்களது துரிதமான - நேரடியான சேவைகளுடன் சேமிப்புகள், ஃபிக்ஸட் டெபாஸிட் மற்றும் ரெக்கரிங் டெபாஸிட் திட்டங்களும் எல்லா யூகோ பாங்க் கிளைகளிலும் இயங்கிவருகிறது.

விவரங்களுக்கு அருகிலுள்ள யூகோ பாங்க் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்
தாங்களே தங்களுக்கு உதவ மக்களுக்கு லாபகரமாக உதவுகிறது

UCOC-39 TAM





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேண்டும்

-- பாரதியார்

■

கோகுலம்

மலர் 3 □ இதழ் 16

நவம்பர் 10, 1974

ஆனந்த, ஐப்பசி, 24

■

சந்தா விவரம் :

உள்நாடு:

ஒரு வருடம் ரூ. 13-00

ஆறு மாதம் ரூ. 6-50

வெளிநாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ. 25-00

மானேஜர் :

கோகுலம்
கல்கி பூங்கா,
சென்னை - 600031



அட்டைப்படச் சிறுவன் :

"என்ன சார், கங்கா ஸ்நானம் ஆச்சா?"

வண்ணப் படம் :

துரைலிங்கம்



தேச தேசக் கதைகள் : செனகல் நாடு

உமரும் சுரைக்குடுக்கையும்

எஸ். கந்தசாமி

சமுத்திரத்துக்கு அப்பால் வெகு தூரத்திலுள்ள ஒரு ராஜ்யத்தில் சிறு கிராமம் ஒன்று இருந்தது. அந்த வருடம் விளைச்சல் சரியில்லாமல் போனதால் அவ்வூர் மக்களுக்கு உண்பதற்கு எதுவுமே கிடைக்கவில்லை.

அந்த ஊரில் உமர் என்றொரு குடியானவன் வசித்து வந்தான். அவன் வீட்டிலிருந்த உணவுப் பொருட்கள் எல்லாம் தீர்ந்துவிட்டன. அவனது மனைவியும் குழந்தைகளும் பசியால் வாடினர். அவனுக்கும் ஒரே பசி.

ஒரு நாள் அவன், இனியும் சும்மா இருந்து பயனில்லை; அருகில் உள்ள காட்டுக்குள் சென்று அங்கு கிடைக்கும் காட்டுப் பழங்களையாவது மனைவி, மக்களுக்குக் கொண்டு வரலாம் என எண்ணிப் புறப்பட்டான். அப்போது ஒரு பெரிய புதரின் அருகே யாரோ வேதனை தோய்ந்த குரலில் அவனைக் கூப்பிடுவது போல் இருந்தது.

உமர் அந்த இடத்தில் சற்றுத் தயங்கிய வண்ணம், "இந்த நடுக் காட்டில் யார் நம்மைக் கூப்பிட்டிருப்பார்கள் ?" என்று சிந்தித்தபடியே சுற்றும் முற்றும் பார்த்தான். புதரின் நடுவில் ஒரு சுரைக் குடுக்கை கிடப்பது தெரிந்தது. அந்தக் குடுக்கையைச் சுற்றிலும் முட்செடிகள் மறைத்து நின்றன.

"ஐயா, இந்த முட்கள் என்னைக் குத்தித் துன்புறுத்துகின்றன. என்னை இங்கிருந்து காப்பாற்றினால் நான் உனக்கு நல்ல வெகுமதி தருகிறேன்" என்று அந்தக் குடுக்கை சொன்னது.

வீட்டில் மனைவியும், பிள்ளைகளும் பசியால் வாடுகிற வேளையில் அவர்களுக்கு உணவு தேடுவதை விட்டுவிட்டு, இந்தச் சுரைக் குடுக்கையை விடுவித்துக் கொண்டிருக்க அவனுக்கு விருப்பமில்லை. ஆயினும், அந்தக் குடுக்கையின் வேதனைக் குரலைக் கேட்டு அவன் மனம் இளகியது. உமர் புதரினுள் கையை விட்டு அந்தக் குடுக்கையைச் சிரமப்பட்டு வெளியில் எடுத்தான். அவன் கையெல்லாம் முள் தைத்து ஒரே இரத்தக் காயம்.

"நன்றி, உமர் ! என்னை உன்னோடு வீட்டுக்குக் கொண்டு போ, நான் உனக்கு வேண்டிய உதவி செய்வேன்" என்றது குடுவை.

உணவு தேடிக் காட்டுக்குள் வந்த உமர், தான் ஒன்றுக்கும் உதவாத இந்தச் சுரைக் குடுக்கையுடன் வீடு செல்ல விரும்பாவிட்டாலும், மாலை இருள் மூடி வந்தபடியால் வேறு வழியில்லாமல் வீடு திரும்பினான்.

வீட்டிலிருந்தவர்கள் ஆவலுடன், "உண்ணுவதற்கு என்ன கொண்டு வந்தீர்கள் ?" எனக் கேட்டனர்.

"ஒன்றுமில்லை, இந்தக் காலிச் சுரைக் குடுவைதான் கிடைத்தது" என்று உமர் நடந்ததை விவரமாகச் சொன்னான். குழந்தைகள் பசியால் அழ ஆரம்பித்தன.

உடனே அந்தக் குடுவை பேசியது: "உமர் உனக்கு என்ன வேண்டுமோ, அதைக் கேள் ! நான் தருகிறேன்" என்றது.

"எனக்கு இப்போதே குடுவை நிறையக் கூழ் வேண்டும்" என்று உமர் சொல்லி முடித்ததுதான் தாமதம் ! உடனே குடுவையில் ருசியான கூழ் நிறைந்திருந்தது !

குழந்தைகளும், அவன் மனைவியும் அப்படியே அதிசயித்துப் போயினர். மீண்டும் மீண்டும் வேண்டும் என்று கேட்டு வயிறாரக் குடித்தனர். அதோடு மாமிசம், காய்கறி, மீன் எல்லாம்கூட வேண்டும் என்று கேட்டு அன்றைய

தினம் உமரின் குடும்பத்தினர் ஒரு விருந்தே சாப்பிட்டார்கள்.

பின்னர், உமர். தன் மனைவியிடம், '' இந்த அதிசயக் குடுவையைப் பற்றி எவரிடமும் சொல்ல வேண்டாம். ஏனென்றால் அவர்கள் ; யாராவது இதைத் திருடிக் கொண்டு போய்விடுவார்கள்'' என்று சொன்னான்.

சுபாவத்தில் உமரே ஓர் அரட்டைக்காரன். அவனே, தன் பக்கத்து வீட்டுக்காரனிடம் தனக்குக் கிடைத்த அதிசயச் சுரைக் குடுவையைப் பற்றிச் சொல்லிவிட்டான். அடுத்த வீட்டுக்காரன் இந்த விஷயத்தை எதிர் வீட்டுக்காரனிடம் சொல்ல, அவன் இன்னொருவனிடம் சொல்லக் கடைசியில் விஷயம் அரசன் காதுக்கே எட்டியது.

அடுத்த நாள் அரசனே இந்த அதிசயக் குடுவையை நேரில் காணப் புறப்பட்டு, உமர் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். உமரிடம் குடுவையைக் காட்டுமாறு கட்டளையிட்டான். உடனே, குடுவை நிறையத் தங்கம் வேண்டும் என்று கேட்டான். அடுத்த கணமே குடுவையில் தங்கத் தூளாக நிரம்பியிருந்தது. இதைக் கண்டு அதிசயித்த அரசன், '' முட்டாள்! நீ கூழும், சோறும்தானே இந்தக் குடுவையிடம் கோரினாய்! இதை வைத்திருக்க உனக்குத் தகுதியில்லை'' என்று கூறிக் குடுவையை அரண்மனைக்கு எடுத்துச் சென்று விட்டான்.

உமருக்கு ஒரே ஏமாற்றமாக ? போய்விட்டது. என்ன செய்வதுப் மன்னரின் சேவகர் ஒவ்வொருவரிடமும் இருந்த கூர்மையான கத்தியைப் பார்த்த அவன் பயந்தே போய்விட்டன்.

இரண்டு மூன்று நாட்கள் இதை எண்ணி எண்ணி வருந்திய உமர் வேறு வழியின்றி மீண்டும் காட்டை நோக்கிக் கிளம்பினான்.


முன்பு சுரைக் குடுக்கை கிடந்த அதே புதரின் அருகில் சென்ற போது யாரோ தன்னை முரட்டுக் குரலில் கூப்பிடுவது போலக் கேட்டது.


சுற்றிலும் பார்த்தபோது புதரின் நடுவில் பளபளவென்ற மின்னிய ஒரு வெள்ளிக் கல்தான் தென்பட்டது.

''ஆகா! இந்தக் கல்லா என்னைக் கூப்பிட்டது ?'' என்று கூறினான். அவன் இதைச் சொல்லி முடித்தானோ இல்லையோ, ''படார்'' என அவன் தலையில் ஓங்கி ஓர் அடி விழுந்தது. அந்தக் கல்தான் எம்பி வந்து அவனை அப்படித் தாக்கியது. '' என் பெயர் பெரும் பாறையாக்கும்! நான் ஒன்றும் கல் அல்ல! யாராவது என்னைக் கல் என்று சொன்னால் எனக்குப் பொல்லாத கோபம் வரும், அவர்களைச் சும்மாவிட மாட்டேன்'' என்றது.

உமர் தலையில் அந்தக் கல் தாக்கிய இடத்தைத் தடவிக் கொண்டே, ''நாசமாய்ப் போன பாறை! என்னமாய் வலிக்கிறது '' என்று முனகிக் கொண்டான். இன்னொரு முறை வாய் தவறிக் கூட, 'கல்' என்று சொல்லி அடி வாங்க அவனுக்குத் தெம்பில்லை.

அந்த வேதனையிலும் அவனுக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. அவன் அந்தக் கல்லை எடுத்துப் பத்திரமாக ஒரு துணியில் சுற்றிக் கொண்டான்.





வாடா மலர்

முட்டாளுக்கு "மௌனமாய் இரு" என்பதைவிட உயர்ந்த உபதேசம் வேறொன்றும் இல்லை.

அதன் நன்மையை அறிந்து விட்டால் அவன் முட்டாளாக இருக்க மாட்டான். —ஸா அதி

முட்டாள் ஆயுள் காலம் முழுதும் அறிஞருடன் பழகினாலும் உண்மை அறியான்.

கரண்டிக்குக் குழம்பின் ருசி எப்படித் தெரியும்? —சீனப் பழமொழி

சற்றுக் கனமாகவே இருந்த போதிலும் கஷ்டப்பட்டு அதைச் சுமந்து கொண்டு நேராக மன்னரிடமே சென்றான்.

உமரைக் கண்டதும் மன்னர், "ஏன்? சுரைக் குடுவையைத் திரும்பப் பெறலாம் என்ற ஆசையில் இங்கு வந்தாயா? அதெல்லாம் முடியாது. அது ராஜாங்கச் சொத்தாகிவிட்டது. வேறு ஏதாகிலும் கேள்" என்று சொன்னார்.

உமர், "இல்லை, அரசே! நான் அந்தச் சுரைக் குடுகைக்காக வரவில்லை, அதைவிட அதிசயமான பொருள் ஒன்றைத் தங்களுக்குக் கொண்டு வந்துள்ளேன்" என்று கூறி மூட்டையை அவிழ்த்தான்.

உள்ளே பளபளவென இருந்த கல்லைக் கண்டு ஏமாற்றம் அடைந்த மன்னர், "பூ இவ்வளவுதானா? இந்தக் கல்லைத்தான் அதிசயமான பொருள் என்று சொன்னாயா?" என்றார்.

"டங்" என மன்னரின் மண்டையில் அடி விழுந்தது. "ஓ! என்னடா இது, சனியன் பிடித்த கல்!" என்றார். இந்த முறை அவரது முகவாயில் 'மடக்' கென்று ஒரு அடி!

வலி பொறுக்கமாட்டாத மன்னர், "யாரங்கே! முதலில் இந்த நாசமாய்ப்போன கல்லை வெளியே கொண்டு போங்கள்" என்றார்.

சேவகர்கள் அந்தக் கல்லை தொடுவதற்கு முன்பே மன்னரின் தாடையில் இன்னோர் அடி விழுந்தது.

திடுதிடுவென ஓடி வந்து இந்த அதிசயக் காட்சியைக் கண்ட சேவகர்கள் ஒவ்வொருவரும், "அடேயப்பா! இந்தக் கல் என்னமாய் எம்புகிறது" என்று வியந்து பேசினார்கள்.

இதைக் கேட்கக் கேட்க அந்தக் கல்லுக்கு மேலும் வேகம் வந்துவிட்டது. அது விரட்டி விரட்டி அரண்மனைச் சேவகர்களைத் தாக்க ஆரம்பித்துவிட்டது.

'டங்' ஒருவன் மண்டையில் அடி!

'படக்' ஒருவன் முகத்தில் அடி!

'ணங்' இன்னொருவன் முழங்காலில் அடி! இப்படி அது எல்லோரையும் தாக்கியது.

அடி வாங்கிய சிலர் கீழே விழுந்து விட்டனர். சிலர் வலி தாளாது அரண்மனையைவிட்டே வெளியில் ஓடி விட்டனர்.

இதையெல்லாம் எதிர்பார்த்து நின்ற உமர், ஓசைப் படாமல் தனது சுரைக் குடுக்கையை எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வீடு வந்துசேர்ந்தான்.

வீட்டுக்கு வந்ததும், முதல் வேலையாகத் தன் சொற்ப உடைமைகளைப் பொறுக்கிக் கொண்டு, மனைவி மக்களையும் கூட்டிக் கொண்டு, உடனே அந்த ராஜ்யத்தை விட்டே வெளியேறி விட்டான்.

பசியின் கொடுமையை விட அரசனின் கொடுமை அதிக வேதனையைத் தரும் என்பதைஉமர்நன்கறிந்து கொண்டான்.



பாபியின் கதை

1858ம் வருஷம் ஜனவரி மாதத்தில் ஒருநாள் இங்கிலாந்தில் உள்ள எடின்பரோ நகரத்தின் கல்லறை நோக்கி ஒரு சிறு கூட்டம் போய்க் கொண்டிருந்தது. ஜான் இரே என்ற போலீஸ்காரரின் சவ ஊர்வலம் அது. அந்த ஊர்வலத்துடன் போலீஸ்காரருடைய நாயும் சென்றது. ஸ்கீடெரியர் என்ற சின்னஞ் சிறிய சடை நாய் அது. அதன் பெயர் பாபி. போலீஸ்காரர் சவ அடக்கம் செய்யப்பட்டார். நண்பர்களும் உறவினர்களும் கல்லறைப் பிரதேசத்தை விட்டுக் கிளம்பிப் போய்விட்டார்கள். ஆனால் பாபி திரும்பவில்லை. தன் எஜமானர் அடக்கம் செய்யப்பட்டிருந்த கல்லறைக்கு அருகிலேயே உட்கார்ந்து இருந்தது.

மறு நாள் காலையில் கல்லறைக் காவலாளி முதல் நாள் புதையுண்ட போலீஸ்காரரின் கல்லறையின் பக்கத்திலேயே ஒரு நாய் காவல் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அவருக்கு வியப்பு. கல்லறைப் பகுதியில் நாய்களை அனுமதிப்பது வழக்கமில்லை. ஆகவே, அதைத் தூக்கிக் கொண்டு போய் வெளியே விட்டார். மறு நாள் காலையில் அது மறுபடியும் அங்கே இருப்பதைக் கண்ட அவர் அன்றைக்கும் அதைத் தூக்கி வெளியில் கொண்டு விட்டார். மூன்றாம் நாள் காலையும் அதே கல்லறைக்கு அருகே உட்கார்ந்து கொண்டிருந்த பாபியைக் கண்ட காவலாளி இந்தத் தடவை அதை வெளியே அனுப்பவில்லை. அதற்கு உணவு கொடுத்து அங்கேயே தங்க அனுமதித்துவிட்டார். பாபியின் முடிவில்லாத அந்தக் காவல் தொடர்ந்தது. அது போலீஸ்காரரின் கல்லறையை விட்டு நகருவது ஒரே ஒரு வேளையில் தான். எடின்பரோ நகரக் கோட்டையில் பகல் ஒரு மணியை அறிவிக்க பீரங்கி முழங்கும். போலீஸ்காரர் உயிரோடு இருந்தவரை, பீரங்கி முழங்கும் அதே வேளையில் ஒரு சிறிய சிற்றுண்டிச் சாலைக்குப் போவது வழக்கம். பாபியும் உடன் செல்லும். அதன் உரிமையாளர்* டிரைல் என்பவர். அதே வேளைக்கு இப்போதும் பாபி அங்கு போயிற்று. சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் அதற்குப் பகல் உணவு வழங்கினார். குழந்தைகளும் அந்த அழகிய நாய்க்கு ஏதாவது கொடுத்தனர். இப்படியே ஒவ்வொரு நாளும் உணவை முடித்துக் கொண்டு மறுபடி பாபி கல்லறைக்கே திரும்பிவிடும்.

1867ல் இங்கிலாந்தில் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. எல்லா நாய்களுக்கும் வளர்ப்பவர்கள் லைசென்ஸ் (அனுமதிப் பத்திரம்) வாங்க வேண்டும் என்று. இதற்குள் பாபி தன் எஜமானரின் கல்லறையைக் காவல் காக்கும் செய்தி ஊரெல்லாம் பரவி அதன் புகழ் ஓங்கிவிட்டது. புரோவாஸ்ட் பிரபு பாபிக்கான லைசென்ஸ் கட்டணத்தைத் தாமே செலுத்த முன்வந்தார். அதற்கு ஓர் அழகான கழுத்துப் பட்டையையும் தயாரித்துப் போட்டார். (இன்றும் அது எடின்பரோ கானன்கேட் மியூசியத்தில் உள்ளது)

தன் கடமையை நிறைவேற்றுவதிலிருந்து பாபியை மழை, பனி, புயல் எதுவும் குலைக்க முடியவில்லை. பதினாலு வருஷங்கள் இப்படியே பாபி தன் எஜமானரின் கல்லறையைக் காவல் காத்து வந்தது. ஏன்? அவர் அங்கிருந்து மறுபடி எழுந்து வருவார் என்று நம்பிக் கொண்டிருந்ததோ ? முதுமையும் தளர்ச்சியும் ஏற்பட்டபோது உணவு விடுதிக்காரரான டிரைல் இனி மேலும் அது திறந்த வெளியில் கிடந்து தன்னை வருத்திக் கொள்ளக் கூடாது என்று அதைப் பலவந்தமாகத் தன் வீட்டுக்கு எடுத்துப் போனார். அன்புடன் அதைப் பராமரித்தார். நன்றி மறவாத பாபியின் உயிர் 1872ம் ஆண்டு ஜனவரி 14ந் தேதி பிரிந்தது. அது இறக்குமுன் மிருகங்களிடம் அன்புள்ளம் கொண்ட பரோனஸ் கோட்ஸ் என்பவர் பாபியின் செயல் பற்றிக் கேள்விப்பட்டு அதற்கு ஒரு வெண்கலச் சிலை செய்து அந்தச் சர்ச் யார்டில் நிறுவினார். இன்றும் அந்த அன்பு நாய் பாபியின் அழகான சிலையை எடின்பரோ நகர் சென்றால் காணலாம். இதுதான் பாபியின் கதை !

– கிட்டு





சோதனை

ஜென்

ஊரைவிட்டு ஓடிப் போன சேகர் திரும்பி வந்திருக்கிறான்.

இச்செய்தி அப்பள்ளி மாணவர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. பள்ளி இடைவேளையின் போது கும்பல் கும்பலாக நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

''டேய், சேகர் இப்போது எப்படி இருப்பான்?''

''முன்னைவிட பலே கில்லாடியாக இருப்பாண்டா?''

''பள்ளிக்கு வருவானா?''

''அவனாவது பள்ளிக்கு வருவதாவது? இந்தப் பக்கம் வர அவனுக்கு மூஞ்சி ஏதுடா?''

ஆனால் அவர்களுடைய ஊகம் பொய்த்துவிட்டது.

அடுத்த நாள் காலை இரண்டாம் பாட வேளை நடந்து கொண்டிருக்கும் போது சேகர் பள்ளியில் நுழைந்து கொண்டிருந்தான்.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்குமுன் இப்பள்ளியில் படிக்கும்போது சக மாணவர்களின் பேனா, பென்சில், ஜியோமிதிப் பெட்டி முதலியவற்றை சேகர் அடிக்கடி திருடிவிடுவான்.

உயர்ந்த உள்ளம் கொண்ட தலைமை ஆசிரியர், சேகர் திருந்திவிடுவான் என்ற எண்ணத்தில் குற்றம் செய்த ஒவ்வொரு முறையும் மன்னித்து அவனைப் பள்ளியில் சேர்த்துவந்தார்.

திடீரென்று ஒரு நாள் பணக்கார வீட்டுப் பிள்ளை மனோகர் வைத்திருந்த பத்து ரூபாயையும், பார்க்கர் பேனாவையும் எடுத்துக் கொண்டு ஊரை விட்டே ஓடிவிட்டான் சேகர்.

மீண்டும் இப்போதுதான் திரும்பி இருக்கிறான்.

பள்ளியில் நுழைந்த சேகர் நேரே தலைமை ஆசிரியர் அறைக்குச் சென்றான்.

சேகரைக் கண்டவுடன் தலைமை ஆசிரியருக்கு ஒரே ஆச்சரியம். அவருக்கு வணக்கம் தெரிவித்துத் தலை குனிந்தபடி நின்றான் சேகர்.

''சேகர், சௌக்கியமாப்பா?'' கனிவுடன் கேட்டார் தலைமை ஆசிரியர்.

அவருடைய அன்புக் குரல் சேகரை நெகிழ வைத்தது. இவர்தான் எத்துணை கருணை உள்ளம் கொண்டவர்!

கண்களில் நீர் மல்க, ''நன்றாக இருக்கிறேன், சார்!.... நீங்கள் எவ்வளவோ கூறியும் நான் இப்பள்ளியில் படிக்கும் போது பல குற்றங்கள் செய்தவன், ஆனால் இப்போது முற்றிலும் திருந்திவிட்டேன்'' என்றான் சேகர்.

தலைமை ஆசிரியரின் உள்ளம் நிரம்பி வழிந்தது.

சேகரை அமரச் சொல்லி அவன் இவ்வூரைவிட்டு ஓடிய பிறகு நடந்தவைகளைக் கூறச் சொன்னார். அவன் கூறினான்.

மனோகருடைய பொருள்களை எடுத்துக் கொண்டு கிளம்பியவன் நேரே பட்டணத்துக்குச் சென்றான். இரண்டே நாட்களில் கையிலிருந்த பணம் தீர்ந்துவிட்டது. பார்க்கர் பேனாவை விற்று அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு இரண்டு நாள் தள்ளினான்.



பிறகு சாப்பாட்டுக்கு வழியில்லை. மீண்டும் திருட எண்ணினான். சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஓர் அம்மாள் கைப் பையை அருகில் வைத்துவிட்டு டிக்கட் வாங்கிக் கொண்டிருந்தாள். பையை எடுத்துக் கொண்டு சேகர் ஓடினான்.

ஆனால் அவனை அங்கிருந்த போர்ட்டர்கள் மடக்கிப் பிடித்துவிட்டார்கள்.

செம்மையான அடி.

போலீஸில் அவனை ஒப்படைக்கும்போது அந்த அம்மா அவனை விடுவித்துத் தன்னுடன் அழைத்துச் சென்றாள்.

அந்த அம்மாள் ஓர் அநாதை இல்லத்தின் தலைவி.

அவன் செய்த குற்றத்தைக் கொஞ்சமும் மனத்தில் வைக்காமல் அடிபட்டதால் வீங்கி இருந்த அவனுடைய உடம்புக்கு ஒத்தடம் கொடுத்தார்கள்.

தாயின்றி வளர்ந்த சேகரின் உள்ளத்துக்கு அது ஒத்தடம் கொடுப்பது போல் இருந்தது.

அப்போதுதான் முதன் முதலில் தான் செய்த குற்றங்களை உணர ஆரம்பித்தான் அவன்.

அதன் பிறகு அந்த அனாதை இல்லத்தில் இருந்த சிறுவர்கள் கடைப்பிடித்த ஒழுக்கம், கட்டுப்பாடு முதலியவற்றைக் கடைப்பிடிக்க முயற்சித்தான்.

ஆரம்பத்தில் சற்றுக் கடினமாகத்தான் இருந்தது.

ஆனால் அவன் பதின்மூன்று வயது பாலகன்தானே !

வெகு விரைவில் மற்றவர்களைப் போலவே மாறிவிட்டான்.

அது மட்டுமல்ல, இப்போது தானாகப் பிழைக்க ஒரு வேலையிலும் அமர்ந்துவிட்டான்.

''இப்போ! எங்கு வேலை செய்கிறாய்?'' என்று தலைமை ஆசிரியர் ஆர்வத்துடன் கேட்டார்.

''தீப்பெட்டி தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்கிறேன், சார்'' என்றான் சேகர்.

தலைமை ஆசிரியருக்குப் பெருமையாக இருந்தது.

அதன் பிறகு தனது உள்ளக் கிடக்கையைத் தலைமை ஆசிரியரிடம் கூறினான் சேகர்.

''சார், இப்பள்ளியில் நான் படிக்கும்போது பலருடைய பொருள்களைத் திருடிவிட்டேன். அக்குற்ற உணர்வு அடிக்கடி என்னைக் குத்திக் கொண்டே இருக்கிறது. யார் யாருடைய பொருள்களைத் திருடினேனோ அப்பொருள்களையெல்லாம் நான் உழைத்துச் சம்பாதித்த பணத்தில் வாங்கி வைத்துள்ளேன். தயை செய்து உரியவர்களிடம் அப்பொருள்களைச் சேர்க்க அனுமதிக்க வேண்டும்'' என்றார் தழுதழுத்த குரலில்.

''மிக்க மகிழ்ச்சி'' என்ற ஆசிரியர், ''பொருள்களுக்குரிய மாணவர்களைத் தனித் தனியாக என் அறைக்கு அழைத்துக் கொடுக்கலாமா, அல்லது நாளை காலை மாணவர் அணிவகுப்பில் கொடுக்கலாமா ?'' என்றார்.

சேகர் யோசித்தான். தனியாகக் கூப்பிட்டுக் கொடுப்பதைவிட பல மாணவர்களுக்கு முன்னால் கொடுக்கும்போது தவறு செய்யும் சில மாணவர்களுக்குப் படிப்பினையாக இருக்கும் என்று எண்ணிய அவன் மாணவர் அணிவகுப்பின் போதே தரலாம் என்று யோசனை கூறினான்.

மறு நாள் காலை மாணவர் அணிவகுப்பு நடந்து முடிந்தது.

தலைமை ஆசிரியர் அறையிலிருந்த சேகர் மேடைக்கு வரவழைக்கப்பட்டான். சேகரைக் கண்டவுடன் மாணவர்களிடையே சிறிது சலசலப்பு ஏற்பட்டுப் பின் அடங்கியது.

தலைமை ஆசிரியர் சேகரைப் பற்றி மாணவர்களிடையே ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். பின் சேகர் கொடுத்த மாணவர் பட்டியலை வாசித்து ஒவ்வொருவராக வந்து பொருள்களை வாங்கிப் போகச் சொன்னார்.

பொருள்களை வாங்க யாரும் வரவில்லை!



ஒரே அமைதி நிலவியது.

தலைமை ஆசிரியருக்கு ஒன்றும் புரிய வில்லை.

மாணவர் தலைவன் மனோகரிடம், ''என்ன விஷயம் மனோகர்?'' என்றார்.

''சார், எங்களை மன்னித்துவிடுங்கள். சேகர் கொடுக்கும் பொருள்களை நாங்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம்'' என்றான்.

''ஏனப்பா.... ஏன்?'' தலைமை ஆசிரியர் உணர்ச்சிவசப்பட்டவராகக் கேட்டார்.

''சேகர் கொண்டு வந்திருக்கும் பொருள்கள் திருட்டுப் பொருள்களாக இருக்கும் சார்'' மனோகர் இவ்வாறு கூறியவுடன் மாணவர் மத்தியில் கேலிச் சிரிப்பு எழுந்தது.

சேகருக்கு நெஞ்சில் ஈட்டி பாய்ந்தது போல் இருந்தது.

எப்போதுமே கோபப்படாத தலைமை ஆசிரியருக்கு அப்போது அளவிட முடியாத கோபம் வந்தது. மாணவர்களைப் பார்த்து, ''இங்கு எந்தச் சிரிப்பும் தேவையில்லை'' என்று உரக்கக் குரல் கொடுத்தார். பிறகு, ''மனம் திருந்தி வந்தவனை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். சேகர் தீப்பெட்டித் தொழிற்சாலையில் கடுமையாக உழைத்துச் சம்பாதித்த தனது ஊதியத்தைக் கொண்டுதான் இப்பொருகளை வாங்கி வந்துள்ளான். என்னைப் போல் அவனுடைய கதையை நீங்களும் கேட்டிருந்தால். இவ்வாறு நடந்து கொள்ள மாட்டீர்கள்'' என்றார்.

''கதைவிட்டிருப்பான் சார்!'' கூட்டத்திலிருந்த ஒரு 'வால்' விளக்கம் கொடுத்தது.

அந்த 'வால்' யார் என்று கண்டு பிடிக்கும் நிலையில் தலைமை ஆசிரியர் இல்லை. பேசாமல் அணிவகுப்பைக் கலைத்துவிட்டுச் சோர்வுடன் தனது அறையை நோக்கி நடந்தார் தலைமை ஆசிரியர். குனிந்த தலையுடன் பள்ளியை விட்டு வெளியேறினான் சேகர்.

அடுத்த நாள் அதிகாலையில் பள்ளி அறிவியல் ஆய்வுக் கூடத்தில் திருட்டு நடந்திருக்கிறது என்ற அதிர்ச்சி தரும் விஷயத்தைத் தலைமை ஆசிரியரிடம் கூறினான் பள்ளி இரவுக் காவலாளி.

இரவு சுமார் பதினொரு மணிக்குக் கருந் தேள் ஒன்று கொட்டிவிட்டதாகவும், தனது வேதனைக் குரலைக் கேட்டுத் தற்செயலாக அங்கு வந்த சேகர் தன்னை வீட்டுக்குச் சென்று மருந்து போட்டு ஒய்வு எடுத்துக் கொள்ளச் சொன்னதாகவும் இரவு காவலைத் தானே செய்வதாகவும் சேகர் கூறினானும். தேள் கொட்டிய வேதனை காலை ஐந்துமணிக்கு நீங்க, தான் மீண்டும் பள்ளிக்குச் சென்றபோது அறிவியல் ஆய்வுக் கூடம் திறந்து கிடந்ததாகவும், சேகர் அங்கு காணப்படவில்லை என்றும் காவலாளி கூறினான்.

ஆய்வுக் கூடத்தில் கந்தகம், பாஸ்வரம் இன்னும் சில முக்கிய இரசாயனப் பொருள்கள் திருடு போயிருந்தன.

இதற்குள் செய்தி காட்டுத் தீபோல் பரவ, சில ஆசிரியர்களும் பல மாணவர்களும் பள்ளிக்கு வந்துவிட்டார்கள்.

சேகர்தான் திருடி இருப்பான் என்றும், அவன்தான் தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலை செய்கிறான் என்றும் மாணவர் தலைவன் மனோகரும் அவனுடைய நண்பர்களும் கூறினார்கள்.

'சேகர் எங்கு போனான்? அவனு இப்படிச் செய்திருப்பான்? ஒரு வேளை வாட்ச்மேன் பொய் கூறுகிறானா?' என்று தலைமை ஆசிரியருக்கு ஒரே குழப்பம்.

இதற்குள் சக ஆசிரியர்கள் போலீஸில் உடனே புகார் கொடுக்கும்படி கூறினார்கள்.

தலைமை ஆசிரியர் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கிளம்பத் தயாரானார்.

அப்பொழுது போலீஸ் ஜீப் ஒன்று பள்ளியினுள் நுழைந்தது.

எல்லாரும் ஒருவித அச்சம் கலந்த ஆவலுடன் ஜீப்பைப் பார்த்தார்கள்.

ஜீப் நின்றவுடன் ஜீப்பிலிருந்து சப் இன்ஸ்பெக்டரும், இரண்டு போலீஸாரும் இறங்கி நேரே தலைமை ஆசிரியரை நோக்கி வந்தார்கள்.


தலைமை ஆசிரியரை நெருங்கிய சப் இன்ஸ்பெக்டர், ''சேகர் என்பவன் உங்கள் பழைய மாணவனா சார்?'' என்று கேட்டார்.

இன்ஸ்பெக்டர் கேட்ட தோரணையிலிருந்து தலைமை ஆசிரியரால் எதையும் கண்டு கொள்ள முடியவில்லை.

'ஒரு வேளை சேகர் ஏதாவது....' தன்னைச் சுற்றி நின்றவர்களை ஒரு முறை பார்த்தார். 'ம்... நல்லா படு சேகருக்கு நீ கொடுத்த இடம்தானே!' என்று ஏளனத்துடன் பார்ப்பதாகப் பட்டது. பிறகு இன்ஸ்பெக்டரை நோக்கி, ''ஆமாம், சார்... சேகர் என் பழைய மாணவன்தான்!'' என்றார்.

''கன்கிராஜுலேஷன்ஸ் சார்! உங்களுடைய மாணவன் நம் நாட்டுக்கு மிகப் பெரிய சேவைசெய்துள்ளான்'' என்றார்.

''வாட்... சேகரா?'' மகிழ்ச்சியின் எல்லையில் தலைமை ஆசிரியர் வாய் பிளந்து கேட்டார். மற்றவர்களுக்கும் ஒரே ஆச்சரியம்! எல்லோரும் சப் இன்ஸ்பெக்டரையே கவனித்தார்கள்.



இரவு வாட்ச்மேன் வீட்டுக்குச் சென்ற பிறகு சேகர் பள்ளியைக் காவல் காத்து வந்திருக்கிறான். ரோந்து சுற்றியபடி இருந்த சேகர் ஒரு முறை பள்ளியின் கோடிக்குச் சென்ற போது ஆய்வுக்கூடத்தில் ஏதோ சத்தம் கேட்டிருக்கிறது.

மெதுவாக சன்னல் வழியாகப் பார்த்திருக்கிறான். ஐந்து முரடர்கள் உள்ளே இருந்திருக்கிறார்கள். ஒருவன் டார்ச் அடிக்க மற்றவர்கள் பொருள்களை எடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் கைத் துப்பாக்கி இருந்திருக்கிறது.

ஊருக்கு வெளிப் புறத்தில் பள்ளி அமைந்திருப்பதால் கூக்குரலிட்டாலும் பயனில்லை என்பதையும், ஐந்து முரடர்களை எதிர்ப்பதிலும் அர்த்தமில்லை என்றும் கண்டுகொண்ட சேகர் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறான்.

பொருள்களை எடுத்துக் கொண்டு வெளியேறியபோது முரடர்களைச் சேகர் பின்தொடர்ந்திருக்கிறான். அந்த முரடர்கள் ஊருக்குள் நுழையாமல் பக்கவாட்டுப் பாதையில் வெகு தூரம் நடந்து காட்டினுள் நுழைந்து ஒரு பாழடைந்த பங்களாவை அடைந்திருக்கிறார்கள். சேகரும் வெகு சாமர்த்தியமாகப் பங்களாவில் நுழைந்து, அங்கு என்ன நடக்கிறது என்பதைக் கவனித்திருக்கிறான்.

அங்கிருந்தவர்கள் சாதாரணத் திருடர்கள் அல்ல. தேச விரோதக் கும்பல். திடீர் திடீர் என்று நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் தேசத்துரோகிகள் அங்கு துப்பாக்கிகளும், வெடி மருந்துகளும் தயாரித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

இப்போது அக்கும்பல் சேகரின் உதவியால் கைதுசெய்யப்பட்டு விட்டனர்.

சப் இன்ஸ்பெக்டர் இவ்வாறு கூறியவுடன் மாணவத் தலைவன் ஒரு கேள்வி கேட்டான்.

''சார், ஒரு சந்தேகம். சேகர் நடு இரவில் எதற்காகப் பள்ளிக்கு வர வேண்டும்?''

''எனக்கும் இதே சந்தேகம் வந்தது. கேட்டபோது, பள்ளியில் உள்ள அனைத்து மாணவர்களும் தன்னை வெறுத்து விட்டதாகவும், மனம் உடைந்த சேகர் உடனே சென்னை திரும்ப முடிவெடுத்ததாகவும், போவதற்கு முன் கடைசி முறையாகத் தான் படித்த பள்ளியைப் பார்த்துப் போக வந்ததாகவும் கூறினான்.''

''சேகர்...சேகர், இப்போது எங்கே?'' தலைமை ஆசிரியர் துடிப்புடன் கேட்டார்.

சற்றுத் தயங்கிய சப் இன்ஸ்பெக்டர், ''இந்த ஊர் மருத்துவ மனையில்'' என்றார் அமைதியாக.

''ஏன், என்ன நடந்தது?'' அங்கிருந்த அனைவரும் ஒரே குரலில் கேட்டார்கள்.

''இடையில் ஒரு விஷயம் நடந்து விட்டது. சமூகத் துரோகக் கும்பல் இருப்பிடத்தை விட்டு மெதுவாக நழுவி சேகர் வெளிவரும்போது அக்கூட்டத்தைச் சேர்ந்தவன் ஒருவன் பார்த்து விட்டான். சேகர் தப்பிக்க ஓட்டம் எடுத்திருக்கிறான். எதிரி அவனை விரட்டினான். அவனிடம் சிக்காமல் ஓடும்போது அந்தத் துரோகி திராவகத்தைச் சேகர் மீது வீசிவிட்டான். சேகர் முகத்தின் இடப்பக்கம் திராவகம் விழுந்து விட்டது. அதையும் தாங்கிக்கொண்டு ஓடிவந்து மெயின் ரோட்டை அவன் அடையவும்; இரவு ரோந்து போலீஸ் லாரி அங்கு வரவும் சரியாக இருந்திருக்கிறது. பாவம், சேகரின் இடப்பக்கக் காது, கன்னம் வெந்து விட்டன.'' சப் இன்ஸ்பெக்டர் கூறி முடித்தவுடன், தலைமை ஆசிரியர் மருத்துவ மனையை நோக்கித் தமது தள்ளாத வயதையும் பொருட்படுத்தாமல் ஓடினார். 'எங்களையெல்லாம் மன்னிப்பாயா சேகர்?' என்று கேட்டபடி கண்களில் நீர் மல்க மனோகரும் அவனுடைய நண்பர்களும் தலைமை ஆசிரியரைத் தொடர்ந்து ஓடினார்கள்.

கறுப்பு ஈயத்தின் கதை



''கறுப்பு ஈயத்தின் கதை உனக்குத் தெரியுமா?'' என்று நளினியைக் கேட்டேன்.

''கறுப்பு ஈயமா? அப்படி என்றால் என்ன?'' என்று குழந்தைகளுக்கே உரித்தான குறுகுறுப்புடன் தன் விழிகளைச் சுழற்றிக் கொண்டே கேட்டாள் அவள்.

''சொல்கிறேன், கேள்'' என்று ஆரம்பித்தேன்.

''காகிதத்தில் எழுதும் பென்சில் தெரியுமா?'' என்றேன்.

''ஓ! தெரியுமே!'' என்றாள்.

''இந்தப் பென்சிலுக்குத்தான் கறுப்பு ஈயம் என்று பழைய காலத்தில் பெயர். 1500ஆம் வருடத்தில்தான் இங்கிலாந்தில் முதன் முதலாகக் கிராஃபைட் பென்சிலைக் கண்டுபிடித்தார்கள். முதன் முதல் கிராஃபைட் பென்சில் உபயோகத்தில் வந்த போது மக்கள் கறுப்பு நிறத்திலிருந்த அதற்குக் கறுப்பு ஈயம் (*Black lead*) என்று பெயர் கொடுத்தனர்...'' என்று கூறி விட்டுச் சற்று நிறுத்தினேன்.

''பென்சில் என்ற பெயர் எப்படித் தோன்றியது?'' என்றாள் நளினி.

''ஆரம்பத்திலிருந்தே சொன்னால் தான் உனக்குப் புரியும்'' என்று சொல்ல ஆரம்பித்தேன்.

''அக்காலத்தில் எழுத்தாணிகளின் உதவியாலும், எலும்புத் துண்டு முனைகளின் உதவியாலும், எழுத்துக்களையும் வரி வடிவங்களையும் மக்கள் எழுதி வந்தனர். கிறிஸ்து பிறப்பதற்கு முன்னால் ரோமானியர்களும், கிரேக்கர்களும் ஈய ஆணிகளை உருவாக்கி மெல்லிய வரிவடிவங்களை உண்டாக்கினர்.''

''இடைக்கால மக்கள், 'பெனிசில்லஸ்' என்ற பிரஷினால் (தூரிகை) மை தொட்டுக் காகிதங்களில் எழுதினர். 'பெனிசல்லம்' என்பது இலத்தீனில் சிறிய வால் என்று பொருள்படும். 'பெனிசல்லம்' அல்லது 'பெனிசில்லஸ்'' பிரஷினால் காகிதங்களில் எழுதி வந்ததால் கிராஃபைட்டினால் செய்யப்பட்ட எழுது பொருளுக்கும் பென்சில் என்ற பெயர் ஏற்பட்டது.''

பதினாறாம் நூற்றாண்டில் இங்கிலாந்து தேசத்தில் சுத்தமான கிராஃபைட் கண்டு பிடிக்கப்பட்டது. பர்ரோடேல் பள்ளத்தாக்கில்தான் இவ்வகையான சுத்த கிராஃபைட் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கிராஃபைட் வேறு எந்த விதக் கலவைகளும் சேர்க்காமலேயே வெட்டப்பட்டவுடன் உபயோகிக்கத்தக்கதாக இருந்தது...''

''கிராஃபைட் என்ற பெயர் எப்படி வந்தது?'' என்று குறுக்கிட்டாள் நளினி.

''1789ல் ஆபிரஹாம் வெர்னர் என்பவர் கிராஃபைட் என்ற பெயரை இந்த எழுது பொருளுக்கு அளித்தார். கிரேக்க மொழியில் 'கிராஃபைன்' எனும் சொல் ''எழுதுவது'' என்று பொருள்படும். பர்ரோடேல் சுரங்கத்தில் கிடைத்துவந்த கிராஃபைட்டை அப்படியே வெட்டி வெட்டி உபயோகப்படுத்தியதால் அங்கிருந்த கிராஃபைட் தீர்ந்துபோகும் அளவில் வந்து நின்றது. இந்தக் காரணங்களால் சுத்தமான பொடி செய்யப்பட்ட கிராஃபைட் தூள் பலவிதமான கலவைகளுடன் சேர்க்கப்பட்டு எழுதுகோலாகப் பயன்படுத்தப்பட்டது. 1795ல் பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த நிகோலஸ் காண்டே என்பவர் களி மண் கலவையைக் கிராபைட்டுடன் சேர்த்து எழுதுகோலாக்கும் முறையைக் கண்டறிந்தார். இந்த முறைதான் இப்போதும் பயன்படுகிறது. களி மண்ணில் மிருதுவான வகையைத் தேர்ந்தெடுத்து அதில் சுத்தமான கிராபைட் தூளைக் கலந்து சூடேற்றிக் கடினமாக்கும் முறையில் இவர் வெற்றி கண்டார்.

''தற்போது நாம் நடைமுறையில் காணும் எழுதுகோல் 17ம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் கண்டு பிடிக்கப்பட்டது. அதற்குமுன், கிராபைட்

குச்சிகளைக் ' கிளிப் ' (Clip)புகளில் பொருத்தியும், கிராபைட் தண்டைச் சுற்றி டுவையின் நூல் சுற்றிக் கட்டியும் எழுதி வந்தனர். கிராஃபைட் முனை தேயத் தேய நூலைத் துணித்து உபயோகித்தார்கள். 1686ல் தான் கிராஃபைட் துண்டுகளை மரத்தில் பதித்து உபயோகிக்கும் முறை கண்டுபிடிக்கப் பட்டது.''


''தற்காலத்தில் நாம் காணும் பென்சில்கள் மூன்று வகையானவை : (1) சாதாரணப் பென்சில் (2) வர்ணப் பென்சில் (3) உலோகப் பென்சில்.

சாதாரணப் பென்சிலின் எழுது முனை, கிராஃபைட் களிமண் கலவையுடன் மெழுகு, இரசாயனப் பொருட்கள் சேர்க்கப்பட்டதாகும்.''

''கிராபைட்டுடன் கலக்கப்படும் நல்ல களிமண் ஜெர்மனியில் பிரசித்தமானது. கிராஃபைட்டுடன் கலக்கப்படும் களிமண்ணின் அளவு பென்சில் எவ்வளவு இலேசாக எழுதுகிறது என்பதைப் பொறுத்தது. கடைகளில் நீங்கள் பல வகையான பென்சில்களைப் பார்த்திருக்கலாம். களிமண் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகச் சேர்க்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு கறுப்பாகப் பென்சில் எழுதும்.

''பென்சில் தயாரிக்கும் விதம்தான் மிகவும் முக்கியமானது. மிக வேகமாகச் செயல்படும் இயந்திரத்தில் களிமண்ணுடனும் நீருடனும், கிராஃபைட் தூள் இட்டுக் கலக்கப்படும். இக் கலவை மற்றொரு இயந்திரத்தினுல் சிறுசிறு கிராபைட் தண்டுகளாக மாற்றப்படும். சாதாரணமாக ஒரு கிராபைட் தண்டின் நீளம் ஏழேகால் அங்குலம். அச்சுப்போல் பென்சில் எழுத விளக்குக் கரியும் சிறிதளவு சேர்க்கப்படுகிறது. இதற்குப் பின்னர், 2000 டிகிரி பாரன்ஹீட் சூட்டில் கிராஃபைட் தண்டுகள் உறுதியாக்கப்படுகின்றன. பென்சில் வழவழ என்று எழுத அத்துடன் மெழுகு சேர்க்கப்படும்.

''பென்சில் எழுதும் பாகம் தயார்! அதைப் பதிக்க மரத்தண்டுகள் வேண்டுமல்லவா? பென்சில் செய்யச் சாதாரண மரங்களைப் பயன்படுத்த முடியாது. சிடார் என்ற மரங்களில் முடிச்சுக்கள் இல்லாமல் சீராக இருப்பதால் அதில் பென்சில் தயாரிக்கப்படுகின்றது. கலிபோர்னியாவில் கிடைக்கும் இவ்வகை மரங்கள் வலுவானவை. ஆனல் எளிதானவை. சிடார் மரத் துண்டுகள் ஏழேகால் அங்குல நீளம், இரண்டே முக்கால் அங்குல அகலம், கால் அங்குல கனத்தில் வெட்டப்படுகின்றன. இப்படி வெட்டப்பட்ட சிடார் பலகையிலிருந்து ஒரே சமயத்தில் ஒன்பது பென்சில்கள் தயாரிக்கலாம். பின்னர் தனித் தனிப் பென்சில்களாக வெட்டுவர். சிறிய சிறிய சிடார் பலகைகளாக வெட்டி வெப்பத்தில் காய வைப்பார்கள். பின்னர், அவற்றில் ஒன்பது கிராபைட் தண்டுகள் வைக்க உதவும் வகையில் பள்ளங்கள் செதுக்கப்படும். கிராபைட் துண்டுகள் இப்பள்ளங்களில் வைக்கப்பட்டதும், மேற்சொன்ன அளவில் வெட்டப்பட்ட சிடார் பலகையை அதன் மேல் வைத்து



வஜ்ரம், கோந்து போன்றவை தடவி ஒட்டிவிடுவர்.

ஒரு பென்சில் உருவாக படிப்படியாக 135 கட்டங்களைக் கடக்க வேண்டியுள்ளது. ஒரு சாதாரண பென்சில் முப்பத்தைந்து மைல் நீளத்துக்குக் கோடு போடும்.''

''அடுத்து வண்ணப் பென்சில். சாதாரணப் பென்சிலை விடச் சற்று வித்தியாசமானது இது. சாதாரணப் பென்சிலில் கலக்கப்படும் கிராபைட் தூளுக்குப் பதில் வண்ணப் பென்சில்களில் வண்ணக் கலவைகள் கலக்கப்படும். மற்ற முறைகளெல்லாம் சாதாரணப் பென்சில் செய்வது போலத்தான்.''

பென்சில்கள்தான் மற்ற எல்லா எழுது பொருள்களையும்விட அதிகம் விற்பனையாவது. பென்சிலுக்கு இன்னொரு பெருமையும் உண்டு. ஆபிரஹாம் லிங்கன் தம்முடைய பெருமை வாய்ந்த 'கெட்டிஸ் பர்க்' உரையைப் பென்சிலால்தான் எழுதித் தயாரித்தாராம்.

பம்பரம்



வட்ட வட்டக் கோலம்போடும்
வண்ணப் பம்பரம் !
குட்டை ஆணி குறுகுறுக்கச்
சுற்றும் பம்பரம் !

சாட்டை வேகச் சொடுக்கினிலே
சுற்றும் பம்பரம் !
வீட்டுக் குள்ளே, வாசலிலே,
எங்கும் ஆடலாம் !

சின்ன அண்ணன் கையிலேற்றிச்
சுற்றிக் காட்டுவான் !
என்ன செய்ய ? என் கயிற்றில்
ஏற வில்லையே !

இன்னுங் கொஞ்சம் வளர்ந்தபின்பு
நானும் சுற்றுவேன்
அண்ணனைப் போல் கையிலேற்றி
ஆட்டங் காட்டுவேன் !

— 'சுப்ர பாலன்'



பம்ப ரம்பார் பம்பரம்
பையன் ஆடும் பம்பரம்
கும்ப கோணம் பாட்டியார்
கொடுத்த னுப்பிய பம்பரம்.


ஆணி அடித்த பம்பரம்
அழகாய் சுற்றும் பம்பரம்
மேனி முழுதும் கோடுகள்
மிகுந்து உள்ள பம்பரம்.

உச்சி மேலே வண்ணங்கள்
உடைய இந்த பம்பரம்
கச்சி தமாய்க் கட்டையில்
கடைந்தெடுத்த பம்பரம்.

விசை யின்றி கயிறதால்
விரைந்து சுழலும் பம்பரம்
அசைந்து தலை ஆட்டியே
அப்பால் ஓடும் பம்பரம்.

கையில் உறங்க பஞ்சு போல்
கனமில்லாத பம்பரம்
பையில் வைத்துக் கொள்ளலாம்
பத்து காசுப் பம்பரம்.

— கோவிந்தகுடி சுல்தான்



காட்டு ராஜாவை உருவாக்கியவர்

கிருஷ்ணவேணி

டார்ஜான்...!

பெயரைப் படித்த உடனேயே உங்களை அறியாமல் நிமிர்ந்து உட்காருகிறீர்கள். உடலிலே ஒரு பரபரப்பு, உள்ளத்திலே ஓர் உவகை. காட்டு மனிதன் டார்ஜானின் தீரச் செயல்களைப் பற்றிய படக் கதையைப் படிப்பதற்குத் தயாராகிறீர்கள், இல்லையா?

டார்ஜான் என்ற பெயரை உலகின் எந்த மூலையில் எந்த மொழி பேசும் யாரிடம் கேட்டாலும் அவர்களுக்குத் தெரியும். மனிதக் குரங்குகளால் கானகத்தில் வளர்க்கப்பட்ட வீர தீரம் மிக்க ஒரு மனிதன் அவன் என்று. நம் நாட்டுப் பத்திரிகைகளிலும் டார்ஜான் படக் கதைகள் வருகின்றன. உங்கள் பெற்றோரிடம் கேட்டால் அவர்கள் இளமையில் பார்த்த எத்தனையோ டார்ஜான் ஆங்கிலத் திரைப்படங்களைப் பற்றி அதிசயமாகக் கூறுவார்கள். இப்படி உலகம் முழுவதிலும் புகழ்பெற்ற ஒரு பாத்திரத்தை உருவாக்கியது யார்? அவர் இதை எப்படி உருவாக்கிப் புகழ் பெறச் செய்தார்?


அமெரிக்க ராணுவக் (ஏழாவது) குதிரைப் படையில் ஓர் இளைஞன். அரிஸோனா மாநிலத்தின் தகிக்கும் சூரிய ஒளியைத் தடுக்கக் கண்களை இடுக்கியபடியே முகத்தில் வியர்வையோடு படிந்துள்ள புழுதியைத் துடைத்துக் கொள்ளுகிறான். அவனுக்குவயது பதினாறுதான். பரந்து கிடக்கும் பாலை நிலத்தின் தனிமையில் அந்தச் சின்னஞ் சிறு ராணுவம் காவல் வேலையில் ஈடுபட்டிருந்தது. அந்தப் படையில் தான் அந்த இளைஞன் இருந்தான்.



மேற்குப் பகுதியில் பணி புரியும் மிகக் கடினமான குதிரைப் படையில் அத்தனை சின்னஞ்சிறு வாலிபர்களைச் சேர்க்க மாட்டார்கள். 1891ல் அந்த இளைஞன் அந்தப் படைப்பிரிவில் சேரும் போது அவனுக்குப் பதினாறு வயதுதான் என்று அவர்களுக்குத் தெரியாது. ராணுவத்தில் சேரும்ஆர்வத்தில் அவன் தன் வயதைக் கூட்டிக் கூறிவிட்டான்.

ரோந்து பார்த்துக் கொண்டு சென்ற படைகள் தங்களுக்கு இடப் பக்கத்திலிருந்த மலைப் பிரதேசத்திலிருந்து யுத்த நாதம் செய்தபடி ஏராளமான செவ்விந்தியர்கள் குதிரைகள் மீது தங்களை நோக்கிப் பாய்ந்து வருவதைக் கண்டான். அந்தப் பதினாறு வயதுப் பையன். அவனிடம் இருந்த சிறிய கைத் துப்பாக்கியில் மருந்து தீர்ந்து போய் இருந்தது. படையின் சார்ஜண்டிடமிருந்து உத்தரவு பிறந்தது. 'சுடுங்கள்!'

அந்த இளைஞனும் அவனது சகாக்களும் வெள்ளமெனப் பாய்ந்து வரும் செவ்விந்தியர்களையும் அவர்களிடமிருந்து மின்னலென வெளிப்படும் தாக்குதல்களையும் கண்டு திகைத்துப் போனார்கள். செவ்விந்தியர்களின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் அமெரிக்க வீரர்களில் ஒவ்வொருவராகக் கீழே விழுந்து கொண்டிருந்த போதிலும் அந்தச் சின்ன வயது இளைஞன் மட்டும் தொடர்ந்து சுட்டுக் கொண்டிருந்தான். அதுவும் அவனது குறி செவ்விந்தியர்களின் தலைவனாக இருந்த ஓர் இளைஞன் மீதேஇருந்தது. அந்தச் செவ்விந்திய வீரன் குதிரையை விரட்டி ஓட்டிய லாகவம்,



போரிட்ட முறை எல்லாமே அற்புதமாக இருந்தன. அமெரிக்கத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் செவ்விந்தியப் படை மலைப் பிரதேசத்தை நோக்கிப் பின்வாங்கியது.

''அந்த வீரன் யார்?'' என்று கேட்டான் சின்னஞ் சிறு அமெரிக்கச் ராணுவ வாலிபன், தம் சகாக்களிடம்.

''அவனா? அவன்தான் செவ்விந்தியர்களின் மகத்தான தலைவன், மாபெரும் வீரன், ஜெரானிமோ!'' என்ற பதில் கிடைத்தது.

இந்தப் பதினாறு வயது பாலகன் பின்னால் புகழ்பெற்ற எழுத்தாளனாக மாறிய போது செவ்விந்தியர்களை வைத்து இரண்டு நாவல்களை எழுதினான். யுத்தத் தலைவன் *(The War Chief)* அபாச்சி அரக்கன் *(Apache Devil)* என்பவை அவ்விரண்டும். இரண்டு புத்தகங்களிலும் செவ்விந்தியர்களிடம் அனுதாபம் ஏற்படும் வகையில் நிகழ்ச்சிகள் விவரிக்கப் பட்டிருந்தன. ஆனால் இந்த எழுத்தாளரைப் பிரபலமாக்கியது இவ்விரு புத்தகங்களும் அல்ல. இவரை உலகுக்கு அறிமுகப்படுத்தி லட்சாதிபதியாக வாழ வைத்தது கானகத்தின் தலைவனாக அவர் உருவாக்கிய **டார்ஜான்** பாத்திரம்தான்.

பதினாறு வயதில் ராணுவத்தில் பணியாற்றிய இவருடைய பெயர் **எட்கார் ரைஸ் பர்ரோஸ்** என்பது. சீக்கிரமே இவருடைய உண்மை வயது தெரிந்துவிடவே குதிரைப் படைப் பிரிவிலிருந்து எட்கார் வெளியேற்றப்பட்டார். ராணுவ வேலை இழந்த பர்ரோஸ் இடாஹோ மாநிலத்துக்குப் போய் ஒரு ரேஞ்சில் கௌபாயாகக் கடினமான வாழ்க்கையை முகம் கடுக்காமல் மேற்கொண்டார். ஆனால் அங்கு ஒரே மாதிரியான வேலை. சாகஸங்களுக்கு வாய்ப்பில்லை. ஆனால் இங்கு வாழ்ந்தது பிற்காலத்தில் சில நாவல்கள் உருவாக்கப் பயன்பட்டது. அது வேறு விஷயம். கௌபாய் வேலையை உதறிவிட்டு ஒரிகானில் ஒரு கடை வைத்தார். அலுப்புத் தட்டும் தொழில். அதிக லாபம் இல்லை. ஆகவே கடையை விற்றுவிட்டு ஸால்ட் லேக் சிடியில் ரயில்வே போலீஸ்காரராகச் சேர்ந்தார். விரைவிலேயே இந்த வேலையும் போரடிக்கவே ஒரிகானிலிருந்த தங்கச் சுரங்கங்களை நோக்கிச் சுரங்கத் தொழிலாளியாகப் போனார். சுரங்கம் இருந்தது தொழிலாளிகள் குடைந்து கொண்டிருந்தார்கள். ஆனால் தங்கம்தான் இல்லை!

இதற்குள் பர்ரோஸுக்கு முப்பத்தைந்து வயதாகிவிட்டது. இன்னும் இவர் உருப்படியாக ஒரு தொழிலிலும் உட்காரவில்லை. தன் வாழ்க்கையே ஒரு தோல்வியோ என்று தளர்ச்சி அடைந்த நிலை. ஒரு நாள் பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டிருந்தவருக்குப் 'பளீர்' என்று ஓர் எண்ணம் தோன்றியது. ''எழுத்தாளனானால் என்ன? நாமும் தான் எழுதிப் பார்ப்போமே!''

இப்படி ஓர் எண்ணம் தோன்றியதும் பிறந்ததுதான் இவருடைய முதல் (புத்தகம்) கற்பனை. குரங்கு மனிதன் டார்ஜான் *(Tarzon of the Apes)*.

ஜான் கிளேய்டன் என்ற ஆங்கிலேய உயர் குடிப் பிறந்த ஒருவனும், அவன் மனைவியும் கப்பல் பிரயாணம் செய்யும் போது கப்பலில் கலகம் ஏற்படுகிறது. கலகக்காரர்கள் தம்பதியரை ஆப்பிரிக்காவின் தனித்த கடற்கரை ஒன்றில் இறக்கிவிட்டுப் போய்விடுகிறார்கள். ஆப்பிரிக்காவின் அடர்ந்த கானகத்தினுள் அலைந்து திரிந்த அந்த ஆங்கிலத் தம்பதிகள் ஓர் ஆண் குழந்தைக்குப் பெற்றோர்களானதும் ஒரு விபத்தில் இறந்துவிடுகிறார்கள். குழந்

தையை மனிதக் குரங்கு இனம் ஒன்று எடுத்துத் தங்களில் ஒன்றாக வளர்கின்றன. குரங்குகளால் வளர்ந்து பெரியவனாகிக் கானகத்தின் ராஜாவாகிறான் டார்ஜான். இதுதான் எட்கார்ரைஸ் பர்ரோஸின் முதல் கற்பனை. டார்ஜான் கதைகளில் முதல் கதை.

பர்ரோஸின் இந்த முதல் கதைக்கு மகத்தான வரவேற்புக் கிடைத்தது. இதே மாதிரி இன்னும் பல சாகஸக் கதைகள் வேண்டும் என்று வாசகர்கள் விரும்பினார்கள். பர்ரோஸ் இருபதுக்கும் மேலான டார்ஜான் நாவல்களை எழுதி; ஒரு டஜனுக்கும் அதிகமாக டார்ஜானையும் செவ்விந்தியர்களையும் கொண்ட கதைகளை உருவாக்கினார். வீனஸ் கிரக வாசிகளையும் டார்ஜானையும் வைத்து நான்கு நெடுங் கதைகளைப் புனைந்தளித்தார். பூமியின் நடு மையத்தில் வாழ்வதாகக் கற்பனை இனத்தவர்களான பெலுஸிடாருடன் தொடர்பு படுத்தி ஏராளமான டார்ஜான் கதைகளை எழுதிக் குவித்திருக்கிறார்.

டார்ஜான் நாவல்களைத் தவிர துப்பறியும் நாவல்கள், வெஸ்டர்ன், சரித்திர, விஞ்ஞானக் கற்பனை நாவல்களையெல்லாம்கூட இவர் எழுதி இருக்கிறார். ஆனால் இவருக்குப் புகழையும் பொருளையும் கொண்டு குவித்தது டார்ஜான் படைப்புக்கள்தான். பத்தே வருஷத்தில் மிலியனராகிவிட்டார். கலிபோர்னியாவில் டார்ஜானா என்ற ஒரு பெரிய பண்ணையையே (Ranch) சொந்தமாக நிறுவினார். 'எட்கார் ரைஸ் பர்ரோஸ் இன் கார்ப்பொரேஷன்' என்ற ஒரு நிறுவனத்தையும் தோற்றுவித்தார். அது இன்றும் 'டார்ஜான்' என்ற கதாபாத்திரத்தை மட்டும் வாடகைக்குக் கொடுத்து ஏராளமாகப் பணம் பண்ணிக் கொண்டிருக்கிறது. அந்தப் பாத்திரத்தை வாங்கிக் கொண்டு வேறு பலரும் இப்போது டார்ஜான் கதைகள் எழுதுகிறார்கள். இன்று வரும் டார்ஜான் கதைகள் எல்லாம் எட்கார்ரைஸ் பர்ரோஸ் எழுதியவை அல்ல. பர்ரோஸின் கற்பனைப் பாத்திரத்தைக் கடன் வாங்கி வேறு எழுத்தாளர்கள் திரிக்கும் கதைகள்தான் அவை.


பர்ரோஸின் படைப்புக்களில் நாற்பதுக்கும் அதிகமானவை திரைப் படங்களாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் பாதிக்குமேல் டார்ஜான் கதைகள். டார்ஜான் கதைகள் பலவேறு பாஷைகளிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன.

இவருடைய புத்தகங்கள் இதுவரை பல பதிப்புக்கள் வெளிவந்துவிட்டன. இன்னும் வந்து கொண்டிருக்கின்றன.

கடந்த மகாயுத்தத்தின் போது தமது அறுபதாவது வயதில் போர்க்களத்துக்குப் போனார், பத்திரிகை நிருபராகப் பணியேற்று. அப்போது அவரோடு பணியாற்றியவர்கள் பர்ரோஸின் தைரியத்தையும், சகிப்புத் தன்மையையும் கண்டு பிரமித்துப் போனார்கள்.

1950ம் ஆண்டு தமது எழுபத்து நான்காவது வயதில் எட்கார்ரைஸ் பர்ரோஸ் காலமான போது உலகெங்கிலும் உள்ள பத்திரிகைகள் அவரது மறைவுக்கு ஆழ்ந்த வருத்தம் தெரிவித்து எழுதின. அவருடைய எழுத்தினால் மகிழ்ச்சியையும் மன நிறைவையும் பெற்ற கோடிக்கணக்கான மக்கள், உலகின் ஏதோ ஒரு மூலையில் இருந்தாலும்கூட, அவருடைய புகைப்படத்தைக் கண்டிராத போதும் தமக்கு மிகவும் வேண்டப்பட்டவரும், நெருக்கமான வருமான ஒருவரை இழந்த வேதனையை அனுபவித்தார்கள்.

மக்களைக் குதூகலப்படுத்த வேண்டும் என்று விரும்பினார் பர்ரோஸ். இதைத் தமது டார்ஜான் படைப்பின் மூலம் நிறைவேற்றினார். குதூகலம் அடைந்தவர்கள் அவரைக் குபேரனாக்கி விட்டார்கள்.




புதிரோ புதிர்!


ஆழி. வே. ராமசாமி



1. ஓர் இருபத்தைந்து காசு நாணயம், ஓர் ஐம்பது காசு நாணயம், ஒரு பத்துக் காசு நாணயம் ஆகியவை ஒன்றோடு ஒன்று ஒட்டியவாறு வைக்கப்படுகின்றன. இப்போது நீங்கள் பத்துக் காசை இருபத்தைந்து காசுக்கும் ஐம்பது காசுக்கும் நடுவில் வைக்கவேண்டும். பத்துக் காசை மட்டும் நகர்த்தலாம். இருபத்தைந்து காசைத் தொடக்கூடாது. ஐம்பது காசையும் நகர்த்தக் கூடாது. முடியுமா?




2. ஒரு பெரிய பெட்டி இருக்கிறது. அந்தப் பெட்டிக்குள் சிறிய 4 பெட்டிகள் இருக்கின்றன. அந்த 4 பெட்டிகள் ஒவ்வொன்றிலும் இன்னும் சிறிய 4 பெட்டிகள் இருக்கின்றன. ஆக மொத்தம் எத்தனை பெட்டிகள்?



3. இந்த ஒன்பது புள்ளிகளையும் காகிதத்தில் வைத்த பேனவை எடுக்காமல் 4 நேர் கோடுகளால் இணைக்க வேண்டும். முடியுமா? கோடுகளை எவ்வளவு தூரம் வேண்டுமானலும் நீட்டிக் கொள்ளலாம்.

4. ஒரு சதுரமான விளையாடுமிடம் இருக்கிறது. அதன் நான்கு மூலைகளிலும் நான்கு மரங்கள் இருக்கின்றன. விளையாடுமிடத்தை இரண்டு மடங்கு பரப்புள்ளதாக ஆக்க வேண்டும். ஆனல் மரங்களை வெட்டக் கூடாது. மரங்கள் விளையாடுமிடத்துக்கு உள்ளேயும் இருக்கக் கூடாது. என்ன செய்வீர்கள்?



5. முத்து கையில் ஒரு சாக்கட்டியை எடுத்துக் கொண்டு கோபுவிடம் போனன். "இந்தச் சாக்கட்டியினல் ஒரு வட்டம் போட்டால், அதை விட்டு உன்னல் தாண்டிப் போக முடியாது" என்றுன் முத்து சிரித்துக் கொண்டே.

"ஏன் முடியாது? நீ எவ்வளவு பெரிதாகப் போட்டாலும், வட்டத்தின் உள்ளே ஓரமாகப் போய்த் தாண்டி விடுவேன்" என்றுன் கோபு.

"அதுதான் முடியாது" என்றுன், முத்து.

"சரி, வட்டம் போடு" என்றுன் கோபு.

முத்து ஒரு வட்டம் போட்டான். ஆமாம். கோபுவினல் அந்த வட்டத்தைத் தாண்டிப் போக முடியவில்லை ஏன் என்று சொல்லுங்கள் பார்ப்போம்

6. திமிங்கிலம் தண்ணீரில் வாழக் கூடியதுதான். ஆனல், அதனல் மீனைப் போல் நீரில் கரைந்துள்ள பிராண வாயுவைச் சுவாசிக்க முடியாது. நீர் மட்டத்துக்கு வெளியே உள்ள பிராண வாயுவைத்தான் சுவாசிக்கும். ஆனல், திமிங்கிலத்தைக் கரைக்குக் கொண்டு வந்தால் அது இறந்து விடும். ஏன் என்று சொல்லுங்களேன்!

5. முத்து சாக்கட்டியினல் வட்டம் போட்டது கோபுவின் இடுப்பைச் சுற்றி!

6. ஒரு பொருள் நீரில் இருக்கும் போது அதன் எடை இலேசாகத் தோன்றும். எனவே, நீரில் வாழும் திமிங்கிலம் கரைக்கு வந்ததும் அதன் உடலின் அழுத்தத்தை அதனலேயே தாங்க முடியாமல் இறந்து விடும்!

7. படத்தின் தவறுகள்: 1. பிறைச் சந்திரன் மேகத்துக்கு மேலே இருக்க முடியாது. கீழேதான் இருக்க முடியும். 2. நட்சத்திரம் பிறைச் சந்திரனின் வட்டத்தைவிட்டுத்தள்ளி இருக்க வேண்டும். 3. வீட்டின் கதவின் கீல் வலப் பக்கம்தான் இருக்கும். 4. வாத்தின் கால் விரல்கள். 5. தாமரை இரவில் மலருவதில்லை. 6. அல்லி இலைதான் இப்படி இருக்கும்.

8. 1, 4, 6, 3, 7, 12, 5, 10, 11. சந்துகளின் வழியாகப் போனல் திருடனைப் பிடித்து விடலாம்.


9. கடல் நீரில் முதலைகள் வசிப்பதில்லை. அதனல்தான் பொய் என்றுன்.

10. இந்த ஐந்து எண்களையும் கூட்டிப் பாருங்கள்: 18, 19, 20, 21, 22.

11. 'குழந்தைகளுக்குப் புரியும்' என்னும் தலைப்பில் ராஜாஜி அவர்கள் ஒரு கதை எழுதியிருக்கிறுர்.

7. இந்தப் படத்தில் ஆறு தவறுகள் இருக்கின்றன. கண்டு பிடியுங்கள், பார்ப்போம்.


8. போலீஸ்காரர் ஒரு திருடனை விரட்டிக் கொண்டு ஓடுகிறார். எந்தெந்த எண்ணுள்ள சந்துகளின் வழியே போலீஸ்காரர் ஓடினால் திருடனைப்பிடிக்கலாம்?



9. குப்புவும் சுப்புவும் மீன் பிடிக்கிறவர்கள். ஒரு நாள் குப்பு கடலில் தனியாக மீன் பிடிக்கப் போனான். போய் வந்த பின் சுப்புவிடம் சொன்னான்: ''அடேயப்பா, இன்று நான் தப்பியதே ஆச்சரியம்தான். நான் கடலில் வெகு தூரம் போய் விட்டேன். அப்போது ஒரு பெரிய முதலை வாயைப் பிளந்துகொண்டு என் கட்டு மரத்தில் வந்து மோதியது. நான் என்ன செய்தேன் தெரியுமா? என்கையிலிருந்தஈட்டியால் அதைக் குத்திக் கொன்றேன்.''


இதைக் கேட்டுக் கொண்டிருந்த சுப்பு கடகடவென்று சிரித்துவிட்டு, ''சரியான பொய்!'' என்றான்.


குப்பு சொன்னதைப் பொய் என்று ஏன் சொன்னான் சுப்பு, சொல்லுங்கள்?




10. 1, 2, 3, 4, 5.... இந்த வரிசையில் அமையும் தொடர்ந்த ஐந்து எண்களைக் கூட்டினால் சரியாக 100 வர வேண்டும். அந்த ஐந்து எண்கள் என்னென்ன?

11. 'குழந்தைகளுக்குப் புரியும்படி ராஜாஜி அவர்கள் கதைகள் எழுதியிருக்கிறார்' — ஒரு கதையின் தலைப்பு இதிலேயே அடங்கி யிருக்கிறது. என்ன தலைப்பு அது?









விடைகள்:

1. பத்துக்காசு நாணயத்தை நகர்த்திக் கொண்டு, ஐம்பது காசு நாணயத்தை இடக்கைக் கட்டை விரலால் நகராமல் அழுத்திக் கொள்ளுங்கள். பிறகு பத்து காசு நாணயத்தை வேகமாக ஐம்பது காசு நாணயத்தை நோக்கிச் சுண்டி விடுங்கள். ஐம்பது காசு நாணயம் இருந்த இடத்திலேயே இருக்கும். ஆனால் இருபத்தைந்து காசு நாணயம் தூரத்தில் விலகிப் போய் விடும். விலகிய இடத்தில் பத்துக் காசு நாணயத்தை வைத்து விடலாமே!


2. மொத்தம் 21 பெட்டிகள்.


3. இரண்டு கோடுகளைப் புள்ளியை விட்டு வெளியே நீட்டுவதன் மூலம் சாத்தியமாகும்.

4. மரங்கள், விளையாடுமிடத்தின் மூலைகளில் இருப்பதற்குப் பதிலாக விளையாடுமிடத்தின் ஓரத்தில், நடுவில் இருக்குமாறு செய்தால் இரண்டு மடங்கு பரப்பளவாகும்.

பாலுவும் பாட்டில் பூதமும் 7

கதை: வாண்டு — சித்திரம்: செல்லம்




கொள்ளுங்கள். தண்..வாளும் தலைப் பாகையும் அந்த லாரியோடு போய் விட்டன. இப்படிக் குறுக்கு வழியில் போய் அதை மடக்க...
அதோ வருகிறது அந்த வண்டி. இந்த ஓடையை ஒரே தாண்ட லில் தாண்டி...
காட்டுங்கள்
இந்த ஓட்டைக்காரின் சக்கரங்களைக் கொண்டு ஒரு வண்டி தயாரிக்கிறேன். என் கத்தி எப்படியும் வேண்டுமே.
இந்த நாய் வீடு நான் உட்கார்ந்து கொள்ள....
அதோ...ர்..ஒரு வண்டி... அதில் பறப்பது என் தலைப்பாகைத் துணி போலிருக்கிறதே...
இதே வண்டி தான் ஷேர்தில்! லாரி ரிப்பேராகி நிற்கிறது. அதனால் தான் நம்மால் இதைப் பிடிக்க முடிந்தது.
தொடரும்



◁ கற்றாழை பூப்பது இப்படித்தான்

கயிறு திரிக்கலாம் காகிதமும் செய்யலாம்

அ. ராம்கோபால்

கற்றாழை நாமெல்லாம் அறிந்த ஒரு தாவரமே. ஆனால் இதன் தாயகம் நம் நாடல்ல. இதன் தாயகம் நம் நாட்டிலிருந்து சுமார் பத்தாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள தென் அமெரிக்க நாடுகளாகும். அங்கு இதில் சுமார் 275 ஜாதிகள் வரை உண்டு. தென் அமெரிக்காவின் பல நாடுகளைப் போர்ச்சுகீசியரும் மற்ற ஐரோப்பியரும் அடிமைப்படுத்தி ஆளத் தொடங்கிய காலத்தில் அங்கிருந்து பல வெப்ப நாடுகளில் இதை அவர்கள் பரப்பினார்கள். நம் நாட்டில் கி.பி. 15வது நூற்றாண்டில் போர்ச்சுகீசியர் இதைப் புகுத்தினார்கள். கடந்த சுமார் ஐந்நூறு ஆண்டு காலத்தில் இது நம் நாடு முழுவதும் பரவி ஒரு உள்நாட்டுத் தாவரம்போல் ஆகிவிட்டது. வட இந்தியாவில் இதை ''ராகஸ் பத்தா'' அதாவது பேய் இலை (ராகஸ் - பேய்) என்று கூறுவார்கள். தென்னாட்டில் கற்றாழை என்றும் கத்தாழை என்றும் சொல்வார்கள். அகேவ், (Agave) என இதற்கு ஆங்கிலத்தில் பெயர்.

மற்ற தாவரங்கள் வளராத மண்ணிலும் செழித்து வளரும் அபூர்வ ஆற்றல் இதற்கு உண்டு. மண் அரிப்பைத் தடுக்க மிகவும் சிறந்தது இது. பூக்கும் தாவரம் என்றாலும் விதை போட்டு இது வளர்க்கப்படுவதில்லை. பக்கக் கன்றுகளைத் துண்டித்து நட்டே பயிராக்குகிறார்கள். நட்ட நான்காவது ஆண்டில் மடல்களை வெட்டி நார் எடுக்கலாம். இவை தன் வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் பூக்கும். இதன் நடுவில் இருந்து மரம் போல் ஒரு தண்டு இருபதிலிருந்து முப்பது அடி உயரம் வளரும். இந்தத் தண்டில்தான் பூக்கள் பூக்கும். பூத்தானதும் கற்றாழை பட்டுப் போகும். இந்தத் தண்டைப் பிளந்து பிழிந்தால் ஒரு வகைச் சாறு கிடைக்கும். இந்தச் சாற்றைப் புளிக்கச் செய்து பல்க் (Pulque) என்னும் ஒரு வகை மது தயாரிக்கிறார்கள். மெக்சிகோவில் இந்த மது விரும்பிக் குடிக்கப்படுகிறது. அங்கு இந்தச் சாற்றைக் காய்ச்சி வடித்து (Distillation) மெஸ்கல் (Mescal) என்ற ஸ்பிரிட்டும் தயாரிக்கிறார்கள்.

ரயில் கற்றாழை

ரயில் கற்றாழை ஒரு வகை! இதன் மடல் 4-6 அடி நீளம், 4-6 அங்குல அகலம் இருக்கும். அஸ்ஸாம், வங்காளம் தமிழ்நாடு, மகாராஷ்டிரம் இங்கெல்லாம் இது காணப்படுகிறது. வறட்சி மிகுந்த பகுதிகளிலும் இது செழித்து வளரக் கூடியது. ஆறடிக்கு ஒரு வரிசையாக எட்டடிக்கு ஒரு செடியாக இதை நட்டு நாருக்காகப் பயிர் செய்கிறார்கள். அஸ்ஸாமில் தேயிலைத் தோட்டங்களோடு ஒட்டி இதையும் பயிரிட்டு ஏராளமாக நார் தயாரிக்கிறார்கள். நட்டு மூன்றாவது அல்லது நான்காவது ஆண்டு தொடங்கி மடல்களை வெட்டி நார் தயாரிக்கத் தொடங்குகிறார்கள். ஒவ்வொரு கற்றாழையிலிருந்தும் அது உயிரோடிருக்கும் 7–8 ஆண்டு காலத்தில் 250–300– மடல்கள் கிடைக்கும். கிழக்காப்பிரிக்காவிலும் இந்தக் கற்றாழையை நாருக்







மாட்டுக்குப் பட்டினி போடாதே!.... மானுக்குச் சங்கிலி போடாதே!

புகைப்படங்கள்: துரைலிங்கம்

காகப் பெரும் அளவில் பயிரிடுகிறார்கள்.

சாதாரணமாக மடல்களைக் கட்டுகளாகக் கட்டி நீரில் ஊறப் போட்டால் சதை பாகம் முழுதும் அழுகிவிடும். அப்போது துணி துவைப்பது போல் கற்களில் அடித்தால் சதை நீங்கிவிடும். நாரைக் கழுவிச் சுத்தம் செய்துகொள்ளலாம். பெரும் அளவில் நார் எடுக்க வேண்டுமானால் அதற்கு டெகார்டிகேடர் (*Decorticator*) என்ற ஓர் இயந்திரம் உள்ளது. இதைப் பயன்படுத்தலாம். கரும்பைச் சாறு பிழியும் இயந்திரத்தில் கொடுத்தால் சதைப் பற்று நீங்கிவிடும். பிறகு நாரைக் கழுவிச் சுத்தம் செய்து கொள்ளலாம். ஒரு மடலின் எடை சுமார் இரண்டு ராத்தல் இருக்கும். ஆயிரம் மடல்களிலிருந்து 60—80 ராத்தல் நன்கு உலர்ந்த நார் கிடைக்கும். நாரின் நீளம் 3—5 அடி இருக்கும். மாவு போன்ற வெண்மை அல்லது மஞ்சள் கலந்த வெண்மை நிறமாக இந்த நார் இருக்கும். அமெரிக்காவும் பிரிட்டனும் இந்த நாரை விரும்பி வாங்குகின்றன.

யானைக் கற்றாழை

நம் நாட்டில் யானைக் கற்றாழை (*Elephant aloe*) என ஒரு வகை உண்டு.


உபயோகம் :

உலகில் வருடம் எட்டுக் கோடி டாலர் பெறுமானம் உள்ள கயிறுகள் இதன் நாரிலிருந்து இப்போது தயாரிக்கப்படுகிறது. கயிறு திரிக்கப் பயன்படாத குட்டை நார்களிலிருந்து பல வித பிரஷ்கள், மோப்கள் (*Mops*) தயாரிக்கப்படுகின்றன. கடல் உப்பு நீரில் மணிலா நார்க் கயிறுகளைவிட இக்கயிறுகள் அதிக நாட்கள் நீடித்து உழைக்கின்றன. கட்டும் கயிறுகள், ட்வைன்கள், மீன் பிடிப்பு வலைகள், ஹாமக்குகள் (*Hammocks*) கதவு, விரிப்புக்கள், ரக்குகள், (*Rugs*) ஜமுக்காளங்கள் (*Carpets*), மட்டரகத் துணிகள் (*Coarse cloth*) தயாரிக்கவும் இந்த நார் பயன்படுகிறது. நார் எடுத்த பிறகு எஞ்சும் சதைப் பகுதி பேப்பர்களும் பேப்பர் போர்டுகளும் தயாரிக்கப் பயன்படுகின்றது.





ஒற்றர்கள் மூலம் வானரப் படைகளுடன் ராமர் போருக்கு வந்துள்ள செய்தி அறிந்த ராவணன் மந்திராலோசனை சபை கூட்ட, அதில் விபீஷணன் நியாயம் உரைக்கிறார். அதனால் வெகுண்ட ராவணன்
அடே, விபீஷணா! உன் அறிவையும் பங்காளிக் காய்ச்சலையும் வெளிப்படுத்தி விட்டாய். இப்போதே இங்கிருந்து ஓடிப்போ.
ஒரு நாள் உண்மை அறிவாய். நான் போகிறேன்.
அபயம், அபயம், ராமா! சரணம் ராமா!
மாய அரக்கர்களிடமிருந்து வரும் ஒற்றனைச் சேர்க்கக் கூடாது.
இவன் உளவாளியாகவும் இருக்கலாம்.
ஜெய் ஹனுமான்
24
கதை: ரா. கணபதி
சித்திரம்: விஜு
அவன் முகத்தின் தெளிவே உள்ளத் தூய்மையைக் காட்டுகிறது. வாலியை வதம் செய்து சுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்ததறிந்து வந்திருக்கிறான். இவனை நாம் தள்ளலாகாது.
சரண் என்று வந்தவனுக்கு அரணாகவே நிற்பேன். அடைக்கலம் என்று வந்த பிறகு ஏற்காமலிருக்க மாட்டேன். சுக்ரீவா அவனை அழைத்து வா.
விபீஷணன் ராமபிரானிடம் நடந்தவைகளைக் கூறிச் சரணடைகிறான்.
ராவணனை வதைத்து உன்னையே லங்காதிபதியாக்குவேன். என் மூன்று சகோதரர்கள் மீது ஆணை.


விபீஷணன் மூலம் ராவணனின் படை பல ரகசியங்களை அறிகிறார்கள். பிறகு கடலைக் கடக்கும் திட்டம் பற்றி ஹனுமார் —
என்னைப்போல் எல்லாராலும் கடலைத் தாண்டிக் கடக்க முடியாது. பாலம் அமைக்கக் கடல் அடங்கி இருக்க வேண்டும்
என்னைப் போல ராமபிரான் சமுத்திர ராஜனிடம் சரணாகதி செய்தால் காரியம் கை கூடும்.
விபீஷணன் யோசனைப்படி ராமர் தர்ப்பாசனத்தின் மீது படுத்துக் கடலரசனை நோக்கித் தவமிருந்தார். மூன்று நாளாகியும் அவன் வரவில்லை. கோபங் கொண்டார் ராமர்.
அக்கினியாஸ்திரத்தினால் கடலை வற்றச் செய்து மண் மீது நடந்து சென்று இலங்கையை அடைவேன்.
பிரபோ! அகம்பாவத் ...ல் அறிவிழந்த என்னை மன்னிக்க வேண்டும். வானரங் கள் போடும் எதையும் ...விடாமல் மிதக்க வைக்கிறேன். தாங்கள் பாலம் அமைக்கலாம்.
உற்சாகங்கொண்ட வானரங்கள் மலைச்சிகரங்களையும் மரக்கிளைகளையும் பறித்து வந்து கடலில் போட்டன. எதைப் போட்டாலும் அவை மூழ்காமல் மிதந்தன. பாலம் வெகு வேகமாக உருவாயிற்று.
கடல் கடந்து இலங்கைக் கரை வந்த வானரப் படைகள் சுவேல மலையில் முகாமிட்டன. அவைகளை பல அணிகளாக வகுத்துப் போருக்குத் தயாரானார்கள். அதே மாதிரி ராவணனும் தலைநகரின் கோட்டை வாயில்களிலும் தன் படைகளைக் குவித்து அணிவகுத்து நின்றான்.

தொடரும்

கேசவன் யானை!

— கே. வெங்கட்டராமன் —

பல ஆண்டுகளுக்கு முன்னால் பாண்டிய நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் இடையே ஒரு போர் மூண்டது. அப்பொழுது பாண்டிய நாட்டை இளம் வழுதி என்ற அரசர் ஆண்டு வந்தார். தன் படைகளை யெல்லாம் போர்க்களம் நோக்கிப் போகக் கட்டளையிட்டார்.

படைகள் போர்க்களம் நோக்கிச் சென்றன.

அவைகளின் நடுவே கேசவன் என்ற யானை கம்பீரமாகச் சென்று கொண்டிருந்தது. அதன் இடுப்பைச் சுற்றியிருந்த தோல்பட்டையில் பாண்டி நாட்டு வில்லம்புக் கொடி, பெரிய கொம்பில் படபட வென்று பறக்க உறுதியாகச் செருகப்பட்டிருந்தது.

அதன் மீது அமர்ந்திருந்த சிவபாதம் என்ற மாவுத்தன்தான் அதை நடத்திச் சென்று கொண்டிருந்தான்.

போர்க்களத்தின் இடையே கேசவன் சென்றதும், ''கேசவா! இங்கேயே இப்படியே நில்!'' என்று கட்டளையிட்டான் அவன்.

அவனது ஆளுகைக்குட்பட்ட கேசவன் யானை தன் நான்கு கால்களையும் பூமியில் பலமாக ஊன்றி சிறு குன்று போல் அசையாமல் நின்றது!


போர் உக்கிரமாக நடந்தது. பாண்டிய நாட்டுப் படைகள் தோற்றுப் பின்வாங்கும் நிலை ஏற்பட்டது. படையினர் நகரம் நோக்கித் திரும்பிடலாமா என்றெண்ணிய பொழுது சிறு மலை போல் மன உறுதியோடு ஆடாமல் அசையாமல் தங்கள் நாட்டுக் கொடியுடன் நிற்கும் கேசவன் யானையைப் பார்த்தனர். அது மன உறுதியுடன் மாவுத்தனின் ஆணைக்குட்பட்டு தான் இருந்த இடத்தைவிட்டு இம்மியும் அகலாமல் நின்ற இடத்திலேயே நிற்பதைப் பார்த்ததும் அவர்களுக்குப் புதிதாகத் தெம்பும், பலமும், வீரமும், வெற்றியடைய வேண்டும் என்கிற உறுதியும் உண்டாயிற்று. அவ்வளவுதான். வீராவேசமாக அவர்கள் எதிரியுடன் போரிட்டு எதிரியின் படைகளைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்தனர்.

பிறகு கேசவன் யானையிடம் வந்தனர். அது இன்னமும்கூடக் கால்களைக் கூட மாற்றி வைக்காமல் நின்ற இடத்திலேயே ஆணி அடித்த மாதிரி நின்று கொண்டிருந்ததைப் பார்த்தனர். அப்பொழுதுதான் அதன் மீது மாவுத்தன் சிவபாதம் இல்லாததைக் கண்டனர். கேசவன் யானை மீது வேல்களும் ஈட்டிகளும் தாக்கிய காயங்களிலிருந்து இரத்தம் கொட்டுவதைக் கண்டனர். அவர்கள் கண்கள் கண்ணீரைக் கொட்டின.

''கேசவா, அரண்மனைக்குப் போகலாம், வா!'' என்று அழைத்தனர்.

அது அசையாமல் அப்படியே நின்று கொண்டிருந்தது!

அரசனிடம் சென்று நடந்ததைத் தெரிவித்தனர். விரைந்து வந்தான் வேந்தன். மடிந்து கிடக்கும் மாவுத்தனையும் அவனுடைய ஆணைக்குட்பட்டு அசையாது நிற்கும் கேசவன் யானையையும் பார்த்தான். அவன் கண்களில் கண்ணீர் பெருகிற்று.



''கேசவா !.... அரண்மனை செல்லலாம் !'' என்று தன் இரு கரங்களும் நீட்டி அழைத்தான் மன்னன்.

கேசவன் யானை கல்லால் அடித்த சிலை போல் நின்று கொண்டிருந்தது ! மாவுத்தன் சிவபாதத்தின் பிள்ளையை அழைத்து வரும்படி பணித்தான் பாண்டிய அரசன். சேவகர்கள் சிவபாதத்தின் பிள்ளையை அழைத்து வந்தனர்.

ஐந்து வயதுப் பிள்ளையான அவன் போர்க்களத்தில் நடந்து வரும் பொழுது அவன் கால்களில் எதுவோ இடறிற்று. குனிந்து பார்த்தான் குழந்தை. அது அவன் தந்தை சிவபாதத்தின் உடல். அதைப் பார்த்த குழந்தை அழுதான்.

கேசவன் யானை தான் நின்ற இடத்திலிருந்தே துதிக்கையை நீட்டி அவன் கண்ணீரைத் துடைத்தது. பிறகு அவனைத் துதிக்கையால் தூக்கித் தன் மேலே வைத்துக் கொண்டு எல்லோரையும் பார்த்தது.

'' முருகா....! உன் அப்பாவின் இடத்தில் உன்னை ஏற்றுக் கொண்டு விட்டதே கேசவன் யானை!... அது வெகுநேரமாக உன் தந்தையின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நிற்கிறது !... அதன் உறுதியையும் கட்டுப்படுதலையும் கண்டு நம் வீரர்கள் வீரம் பெற்று எதிரியை விரட்டி வெற்றி மாலை சூடி விட்டார்கள் ! இனி கேசவன் யானை உன் வார்த்தைக்குத்தான் கட்டுப்படும்!'' என்றார் அரசர்.

'' கேசவா !'' என்றான் குழந்தை அன்புடன்.

பிளிறிற்று கேசவன் யானை.

''அரண்மனைக்குச் செல்!'' என்றான் குழந்தை.

சிவபாதத்தின் சடலத்தை மும்முறை வலம் வந்துவிட்டுக் கேசவன் யானை அரண்மனையை நோக்கி நடந்தது. மன்னனும் மற்றவர்களும் அதன் பின்னால் சென்றனர்.

□ □ □ □ ஓ, அப்படியா ? □ □ □ □

பட்டு: ஆங்கிலத்தில் ஆர்மடில்லோ என்று அழைக்கப்படும் உன்னைத்தானே அழுங்கு என்பார்கள். நீ குறிபறிப்பதில் ரொம்பக் கெட்டிக்காரியாமே!

அழுங்கு: ஆமாம்.... நான் ஒன்பது வளையம் உடைய ஆர்மடில்லோ (Nine Banded Armadillo) பூமியில் குழி பறித்து — அது ஆறு அடி நீளமிருக்கும் — குட்டிகளை அதில் வைத்துப் பாலூட்டி வளர்ப்போம். வயதானதும் நாங்கள் உண்ணும் உணவையே — முட்டைகள், புழுக்கள், பூச்சிகள், மிருதுவான வேர்கள் கிழங்குகள் — அவைகளுக்கும் தருவோம். ஆமையைப் போல் எங்கள் உடலைக் கெட்டியான கவசம் மூடியிருக்கும் — வயிற்றின் அடிப் பாகத்தைத் தவிர.


பட்டு: அவைதான் உன் குழந்தைகளா? உனக்கு எத்தனை பிள்ளைகள், எத்தனை பெண்கள்?

அழுங்கு: எனக்கு எல்லாமே பையன்கள்தான். என் தங்கைக்கு எல்லாமே பெண்கள். எங்களிடம் உள்ள அதிசயமான குணம். நாங்கள் ஒரு தடவையில் போடும் குட்டிகள் ஒன்று ஆண்களாகவே இருக்கும். அல்லது பெண்களாகவே இருக்கும். மற்ற மிருகங்களைப் போல் இரண்டும் கலந்து இருக்காது.

பட்டு: மனிதர்களைப் போல் ஆணும் பெண்ணுமாகக் குழந்தைளைப் பெறாமல் எல்லாம் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ பெறுகிறீர்களே இந்த அதிசயத்துக்காக உன்னைப் பாராட்ட வேண்டியதுதான்

அழுங்கு: அதுமட்டுமல்ல, பிரியமுடன் வளர்த்தால் நாங்கள் ரொம்ப சமத்தாக சாதுவாக உங்களுடன் விளையாடிப் பழகுவோம். கூரான என் நகங்களைக் கண்டு பயப்பட வேண்டாம். விரோதிகளோடு போராடவும் ஆகாரங்களைத் தேடப் பூமியைக் கிளறவுமே இந்தக் கூர் நகங்கள். நட்போடு பழகுபவர்களைத் தாக்க இல்லை. பகலிலே தூங்கி இரவிலே இரை தேட வெளி வரும் எங்களை உன்னால் இலேசில் காண முடியாது.

பட்டு: ஓ! அப்படியா?



மந்திரக் கம்பளம்

வாண்டுமாமா



"உருவை மறைக்கும் அந்த அதிசயக் குல்லாயோ ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்கள் தூரத்தை ஒரே விநாடியில் கடக்கும் மந்திரப் பாதுகைகளோமட்டும் இப்போது இந்த விநாடியில் என் வசம் இருக்குமானால் குந்தளவல்லியைக் கூட்டிக்கொண்டு இந்த நாட்டின் எல்லையை விட்டு வெகு தூரத்தில் ஒரு ரமணீயமான வனத்தில், ஒரு பளிங்கு நீரோடைக் கரையில், பவள மல்லிகை மரத்தின் கீழே போய் உற்கார்ந்து விடுவேன். பவள மல்லிகை மலர்கள் எங்கள் மீது பொல பொல வென்று உதிர்ந்து கொண்டே இருக்கும். ஆகா, அந்தக் காட்சி! குந்தளவல்லியின் முகம் வெட்கத்தால் சிவக்கும் அந்த அழகு! அப்பாவின் முன்னிலையிலிருந்து என்னால் இப்போதே மறைந்துவிட முடியுமானால் எத்தனை நன்றாக இருக்கும்?"

மன்னர் மந்தஹாஸரின் குரல் ஒலித்தபோது இளவரசன் கீர்த்தியின் உள்ளத்திலே உருண்டு கொண்டிருந்த எண்ணங்கள்தான் இவை.

ஆனால் அந்த மந்திரப் பொருள்கள் அப்போது அவன் வசம் இல்லை. ஆகவே அப்பாவின் அழைப்புக்கு மதிப்பளித்துத் திரும்பினான். கீர்த்தி.

"எங்கே கிளம்பி விட்டாய் கனவேகமாக? என்னுடைய அறிவிப்பு பத்தாயிரம் பொற்காசுகள் மட்டுமல்ல, இளவரசி மஞ்சுளாவின் மணாளனாகவும் ஆகவேண்டும். தெரிந்ததா? இன்று உன்னுடைய திருமண நாளும் கூட. மஞ்சுளா ரொம்ப நல்ல பெண் என்று தெரியுமில்லையா உனக்கு?" என்றார் மந்தஹாஸர்.

"மஞ்சுளாவிடம் எவ்விதக் குறையையும் நான் கூறவில்லை அரசே! அவளிடம் எனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. ஆனால்..." கீர்த்தி தன் பேச்சை முடிக்கும் முன்பாக மஞ்சுளா மன்னரின் காலடியில் விழுந்து கதறினாள்: "நான் கீர்த்தி வர்மனை மணக்க மாட்டேன், மாட்டவே மாட்டேன்."

"இதையேதான் நானும் சொல்வதற்கிருந்தேன். மஞ்சுளாவை என் மனைவியாக்கிக்கொள்ள எனக்கு விருப்பமில்லை" என்றான் கீர்த்தி குனிந்த தலையுடன்.

"யாரங்கே?" என்று கடுமையான குரலில் கர்ஜித்தார் மந்தஹாஸர். "அரண்மனைக் கொலைக் களத் தலைவன் எங்கே?" என்று கேட்டார்.

கறுத்த, வாட்டசாட்டமான ஒருவன் கையில் பெரிய வெட்டு வாளுடன் முன் வந்து வணங்கி நின்றான்.

"கத்திக்குச் சாணை பார்த்து வைத்திருக்கிறாயல்லவா?"

"எல்லாம் தயார் நிலையில் உள்ளன மகாராஜா!"

இப்போது மந்தஹாஸரின் பார்வை கீர்த்தியின் பக்கம் திரும்பியது. "கீர்த்தி வர்மா! இதோ இளவரசி மஞ்சுளா, அதோ கொலைக்களத்துக்குக் கூட்டிப் போகும் ஆள். இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பாயோ அது உன் விருப்பம். நான் என் அறிவிப்புப்படி நடத்

டியே தீருவேன். மஞ்சுளாவா? மரணமா? சீக்கிரம் சொல்'' என்றார் மந்தஹாஸர்.

அழகனும், அறிவாளியும், ஆண்மைமிக்கவனுமான கீர்த்தி வர்மன் ஒரு விநாடி மௌனமாக நின்றான். பிறகு மஞ்சுளாவின் அருகில் சென்றான்.

''மஞ்சுளா, உன்னிடம் எனக்குப் பரிவும் அனுதாபமும் உண்டு. உன் அழகையோ அறிவையோ நான் குறைகூறவில்லை. ஆனால் என் வாழ்க்கைத் துணைவியாக உன்னை ஏற்றுக்கொள்ள என்னால் இயலாதிருப்பதற்காக என்னை மன்னித்துவிடு'' என்றவன் கொலையாளியின் பக்கம் திரும்பி, ''கொலைக் களத் தலைவனே! நீ உன் கடமையைச் செய்யலாம். என்னை எங்கு அழைத்துப் போய் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொள்ளலாம். நான் தயாராக இருக்கிறேன்'' என்றான்.

அப்போது மஞ்சுளாவிடமிருந்து விம்மல்களும் கேவல்களும் எழுந்தன. அவையின் கவனம் முழுவதும் அவள்மீதே பதிந்தன. ''என்னை மணப்பதைவிட மரணத்தை ஏற்பது மேல் என்ற முடிவுக்கு வந்து விட்டீர்களா இளவரசே? இத்தகைய முடிவுக்கு வரவேண்டுமானால் என்னைப் பற்றி எவ்வளவு தாழ்வான ஒரு எண்ணம் தங்களுக்கு இருக்க வேண்டும் என்பதை உணர்கிறேன்...'' என்றவளால் அதற்கு மேல் பேச முடியவில்லை. துக்கமும் அழுகையும் அவள் தொண்டையை அடைத்துக் கொண்டன. மஞ்சுளா நல்ல பெண். அவள் காதலன் இன்பவண்ணன் என்ன ஆனான் என்று தெரியவில்லை. அவனை நினைத்து அவள் விடும் கண்ணீர் அவனை உயிரோடு கொண்டு வந்துவிடப் போவதில்லை. இந்நிலையில் கீர்த்தி வர்மன் இறப்பதையும் அவளால் தாங்க முடியவில்லை.


''மஞ்சுளா... நான் உன்னைத் தாழ்வாக மதிப்பிடவில்லை. ஆனால்...''

''கீர்த்தி, நீங்கள் அறிவாளி, அபார ஆற்றல் மிக்க வீரர். உங்களை இந்த நாடு இழக்கக் கூடாது'' என்றாள் மஞ்சுளா விம்மல்களுக்கிடையே.

''ஆனால் நாம் ஒருவரையொருவர் விரும்பவில்லை. என் உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்டிருப்பவள் வேறு ஒருவள். உன் எண்ணத்திலும் இதயத்திலும் யார் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். உயிர் வாழ்வதற்காக மகிழ்ச்சியையும் மதிப்பையும் விலை பேசவேண்டாம் மஞ்சுளா'' என்றவன் மன்னரின் பக்கம் திரும்பிக் கம்பீரமான குரலில் கேட்டான்:

''மணம் அல்லது மரணம் என்ற இந்த நிபந்தனையில் எவ்வித மாற்றத்துக்கும் வழியில்லையா அரசே? உங்கள் அறிவிப்பில் அரைப் பாகத்தை மட்டும் நிறைவேற்றச் சம்மதிக்க மாட்டீர்களா? பரிசுத் தொகையான இப்பொற்கிழியைப் பெறுகிறவர்கள் தம்மை மணக்க விருப்பமில்லாத பாவை மஞ்சுளாவையும் ஏற்க வேண்டுமென்ற இந்த நிபந்தனை தளர்த்தப்பட மாட்டாது என்றால் இந்தப் பொற்காசுகளும் எனக்கு வேண்டாம் இந்தாருங்கள்!'' என்று கூறிப் பொற்கிழியைத் தூக்கி மன்னர் மந்தஹாஸரின் காலடியில் வீசினான் கீர்த்தி.

தன் காலடியில் வந்து விழுந்த பொற்காசுகள் கொண்ட மூட்டையை ஒரு



விநாடி பார்த்தார் மன்னர். அடுத்த விநாடி அவர் குரல் அரண்மனையையே அதிரவைத்தது. ''இது உன்னுடைய பொருள். இதை நீயே வைத்துக்கொள். நான் என்னுடைய வாக்களிப்பிலிருந்து நழுவ மாட்டேன். ஆண்டவன் சந்நிதானத்தில் அவள் கழுத்தில் மங்கல நாணை அணிவிக்கிறாயா? அல்லது மரணத்தை நோக்கி நடக்கிறாயா? சொல் சீக்கிரம்.''

''விசித்திரபுரியின் வருங்கால மன்னனோடு விதி விநோதமான முறையில் விளையாடுகிறது. ஒரு இளவரசனின் வாழ்வை அவன் விரும்பாத ஒரு பெண்ணின் வாழ்வோடு இணைத்து வாழ்வா சாவா என்று கேட்டுச் சவால் விடுகிறார் மன்னர்!'' ஏளனமாக நகைத்து நின்றான் கீர்த்தி.

மந்தஹாஸருக்கும் தன் பிடிவாதம் அர்த்தமற்றது என்று தோன்றியதோ என்னவோ, அவர் முகத்தின் கடுமை கொஞ்சம் குறைந்தது போலிருந்தது. விசும்பிக் கொண்டிருக்கும் மஞ்சுளாவையும் பார்த்தார். ''ஒரு நிபந்தனையின் மீது என்னுடைய முடிவில் மாற்றம் செய்கிறேன்'' என்றார் மன்னர்.

''நிபந்தனை என்னவோ?'' என்று கேட்டான் கீர்த்தி வர்மன்.

''என் இளைய குமாரர்களான இன்ப வண்ணனையும்,' மோகனரங்கனையும் அவர்கள் இங்கிருந்து எப்படிப் போனார்களோ அதேபோல் எனக்குத் திருப்பி அளிப்பதானால் நீ மஞ்சுளாவை மணப்பதிலிருந்து உனக்கு விடுதலை அளிக்க முடியும்'' என்றார் மந்தஹாஸர்.

மன்னரின் வார்த்தைகளைக் கேட்ட கீர்த்தி வர்மன் சில விநாடிகள் சிந்தனை வசப்பட்டிருந்தான். அவையே அவன் முகம் பார்த்தபடி அசையாமலிருந்தது. மஞ்சுளாகூடத் தன் கேவலை நிறுத்தி விட்டுக் கேள்விக் குறியைப் பார்வையிலே மிதக்கவிட்டபடி நிமிர்ந்து கீர்த்தியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''உங்கள் நிபந்தனைக்கு ஒப்புக் கொள்கிறேன். ஆனால் எனக்கும் நீங்கள் சில வாக்குறுதிகளை அளிக்க வேண்டும்'' என்றான்.

''கேட்கலாம். நேர்மையானதாக இருந்தால் நிச்சயம் அளிக்கப்படும்.''

''என்னை நம்முடைய பழைய அரண்மனைக்குப் போக அனுமதிக்க வேண்டும். எவ்விதக் கட்டுக் காவலும் இருக்கக்



போலீஸ்காரர்: ''என்னப்பா, கலயத்தில் என்ன வைத்திருக்கிறாய்?''

மாட்டுக்காரர்: நான் கூழ் டிரிங்க் சாப்பிடுறேனுங்க! -- கே. பி. பத்மா



சிரிக்கச்

''சாராயக் கடையை யெல்லாம் மூடிட்டா உங்க அண்ணன் என்னடா செய்வான்!''


''பாவம், விஸ்கி விஸ்கி அழுவாண்டா!''

-- எஸ். இரி

❀

பேச்சாளர்: மன்னிக்கவும். என் கையில் கடிகாரம் இல்லாததால் நேரம் போவது தெரியாமல் பேசிவிட்டேன்.

கூட்டத்தில் ஒருவர் (கோபத்துடன்): பின்னால் மாட்டியிருக்கும் காலண்டரையாவது பார்த்திருக்கக் கூடாதா?




கூடாது. என்னைத் தொடர்ந்து யாரும் வரவும் கூடாது. என் செயல்களை ரகசியமாகக் கண்காணிப்பதும் தவிர்க்கப்படவேண்டும். மூன்று நாட்களில் நான் என் தம்பிகளுடன் மன்னர் முன் வந்து நிற்பேன். அப்படி நான் என் தம்பிகளுடன் வராவிட்டால் அதன் பிறகு நீங்கள் உங்கள் விருப்பம் போல் எனக்குத் தண்டனை அளிக்கலாம். ஆனால் அதற்கு அவசியமிருக்காது. என் தம்பிகளை உயிரோடு மீட்க முடியாவிட்டால் இளவரசன் கீர்த்தி வர்மன் தன்னைத் தானே அழித்துக் கொண்டு விடுவான்.''

தம் மகனுடைய வீரம்மிக்க வார்த்தைகளைக் கேட்ட மன்னர் கொஞ்ச நேரம் மௌனமாக அமர்ந்திருந்தார். கீர்த்தியின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதனால் அவர் இழக்கப் போவது ஏதுமில்லை. அவருடைய அருமைக் குமாரர்கள் திரும்பக் கிடைக்க வழி ஏற்படலாம். இல்லா விட்டாலும் மூத்த மகனைக் கொன்ற தந்தை என்ற அவப்பெயரிலிருந்து தப்பலாமே. தம்பிகளை உயிரோடு தர முடியாத நிலையில் தன்னையே அழித்துக் கொள்வதாகக் கூறி விட்டானே கீர்த்தி — இத்தகைய எண்ண ஓட்டத்தின் முடிவில் ''உன் நிபந்தனைகள் ஏற்கப்பட்டன'' என்றார் மந்திரஹாஸர்.

மன்னரின் அனுமதி பெற்றுப் பறக்கும் கம்பளத்தைச் சுருட்டி எடுத்துக் கொண்டான் கீர்த்தி. அவையிலுள்ள அத்தனை கண்களும் அவன் மீதே பதிந்திருந்தன. அமைதியாக எவ்வித அவசரமுமின்றி வெளியேறிய கீர்த்தி பறக்கும் மந்திரக் கம்பளத்தைக் கொண்டு போய் நந்தவனத்திலிருந்த புல் தரையில் விரித்தான். அதன் நடுவில் அமர்ந்து கொண்டான். மங்களகிரியை நோக்கிப் போகுமாறு கம்பளத்துக்கு ஆணையிட்டான். பழைய அரண்மனைக்குப் போவதற்கு அனுமதி கேட்ட கீர்த்தி மங்களகிரிக்குப் போவானேன்?

குந்தள வல்லியைக் காணாமல் அவனால் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது போலிருந்தது. வெறும் புத்தகப் புழுவாக இருந்த அவனை ஒரு செயல் வீரனாக மாற்றியது அவளுடைய அழகும் சிரிப்பும்தானே? குந்தளவல்லியின் மோகனமான சிரிப்பை எண்ணி மகிழ்ந்தபடியே மங்களகிரியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான் இளவரசன் கீர்த்தி வர்மன். (தொடரும்)



தெரியுமா?

1454. ஸ்பெயின் நாட்டு நாணயத்தின் பெயர் தெரியுமா?

1455. மேஜை மலை (Table Mountain) எந்த நாட்டில் இருக்கிறது?

1456. போஸ்டன் டீபார்ட்டியினுல் ஏற்பட்ட யுத்தம் எது?

1457. பிர்டி (Birdie) என்று கணக்கிடுவது எந்த விளையாட்டில்?

1458. ஐஸ் ஹாக்கி ஆட்டத்தில் பயன்படும் பந்துக்கு என்ன பெயர்?

1459. கடல் குதிரை என்பது என்ன?

1460. ஒரு நாட்டின் கொடியில் ஒட்டைச்சிவிங்கி உண்டு. அது எந்த நாடு?

1461. அல்ஹாம்பரா (Alhambara) என்பது என்ன?

1462. வெல்ஸ், லிங்கன், வின்செஸ்டர் ஆகிய நகரங்களிடையே ஓர் ஒற்றுமை உண்டு. அது என்ன?

1463. கோபன் ஹேகன், பாரிஸ், லண்டன், கேப்டவுன் — இவைகளில் ஒன்று துறைமுகமல்ல. எது?

1464. புகழ் பெற்ற கடற்படைத் தளபதியான நெல்சனுக்கு ஒரு குறை உண்டு. அது என்ன?

1465. கப்பலில் நங்கூரத்தை இழுப்பதற்குப் பயன்படும் சாதனத்துக்கு என்ன பெயர்?

1466. கடலின் ஆழத்தை எப்படிக் கணக்கிடுவார்கள்?

1467. அட்லாண்டிக் கடலை ஆகாய விமானத்தின் மூலம் முதலில் பறந்து கடந்தவர் யார்?

1468. டெஹ்ரான் எந்த நாட்டில் உள்ளது?

1469. ரிவால்வரைக் கண்டுபிடித்தவர் யார்?

1470. அச்சுக் கலை, தூரதரிசினி, நீராவி யந்திரம், வெடி மருந்து இவைகளில் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது எது?

1471. டியூடர் வமிசத்தின் முதல் அரசர் யார்?

1472. புராதன எகிப்திய மன்னர்களை எப்படி அழைத்தார்கள்?

1473. ஸ்வீடன், நார்வே, கிரீஸ், இத்தாலி இவைகளில் எந்த நாட்டுக்கு இப்போது மன்னர்கள் கிடையாது?

1474. எரிமலையின் உச்சிக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?

1475. லாவா என்றால் என்ன?

1476. எரிமலையிலிருந்து வெளிப்படும் பாறை கீழ்க்கண்டவைகளில் எது? லைம் ஸ்டோன், ஸாண்ட் ஸ்டோன், பியூ மைஸ், சாக்—

1477. பாரதத்தின் நிலப்பரப்பில் காடு எவ்வளவு சதவிகிதம்?

1478. இந்தியாவில் சிமெண்ட் உற்பத்தி முதன் முதலில் எப்போது எங்கு ஆரம்பமாயிற்று?

1479. அலுமினியம் உற்பத்தி நம் நாட்டில் எப்போது ஆரம்பிக்கப் பட்டது?

1480. பழைய ரூபாய் அணு பைசா புழக்கம் மாற்றப்பட்டு டெஸிமல் நாணயங்களின் புழக்கம் ஏற்பட்டது எப்போது?

1481. நேரு தலை பொறிக்கப்பட்ட நாணயங்கள் வெளியிடப்பட்டது எப்போது?

1482. காந்தி தலையும் உருவமும் பொறிக்கப்பட்ட நோட்டுக்களும் நாணயங்களும் வெளியிடப்பட்டது எப்போது?

தெரியுமே!


விடைகள் : 1454. பெஸ்டாஸ் (Pesetas). 1455. தென்ஆப்பிரிக்காவில். 1456. அமெரிக்க விடுதலைப் போர். 1457. கால்ஃப் ஆட்டத்தில். 1458. பக் (Puck). 1459. ஒருவகை மீன். 1460. தங்கனிகா. 1461. மூர் இனத்தவரின் அரண்மனை. 1462. இந்நகரங்களில் மிகப் பழமையான கதீட்ரல்கள் உண்டு. 1463. பாரிஸ். 1464. அவர் ஒரு கையை இழந்தவர். 1465. காபிஸ்டான். 1466. ஃபாதம்ஸ் என்று. 1467. லிண்ட் பர்க் என்பவர். 1468. பாரசீகத்தில். 1469. சாமுவேல் கோல்ட் என்பவர். 1470. வெடி மருந்து. 1471. ஏழாம் ஹென்றி. 1472. ஃபாரோஸ் 1473. இத்தாலி நாட்டுக்கு. 1474. க்ரேட்டர் (Crater) 1475. பழுக்கச் சிவந்த பாறைக் குழம்பு. 1476. பியூமைஸ்(Pumice). 1477. மொத்த நிலப் பரப்பில் 22.3 சதவீதம் காடு. 72.9 மில்லியன் ஹெக்டர்கள். 1478. 1904ல் சென்னை மாகாணத்தில். 1479. இரண்டாவது உலக யுத்தத்தின்போது 1943 வாக்கில். 1480. 1957ம் ஆண்டு ஏப்ரல் மாதம். 1481. நவம்பர் 14ந் தேதி, 1964ம் ஆண்டு. 1482. காந்தி நூற்றாண்டு விழா நினைவாக அக்டோபர் 2ந் தேதி 1969ம் ஆண்டில்.

SRH/OSR

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்

மக்கள் நம்பிக்கை என்னும் இனிதான சுமையை மகிழ்வுடன் ஏற்று செயல்படுவதே எங்கள் குறிக்கோள்.





60 ஆண்டு காலமாக உழைத்து உழைத்து நாங்கள் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகியிருக்கிறோம்.


எனவேதான் சிறிய பார்சல்கள் முதல் பெரிய பார்சல்கள் வரை நாங்கள் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்போம் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது.

இந்த நம்பிக்கைக்கு அடிப்படை இவைதான்:

- எங்கள் லாரிகள் அனைத்தும் எங்களுக்குச் சொந்த மானவையே. எனவே காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.
- அதிக அளவில் பார்சல்களை ஏற்றிச் செல்ல நிறைய டிரெய்லர்களும் எங்களிடம் உண்டு. எனவே காத்திருக்கத் தேவையில்லை.
- லாரிகளில் பழுதேற்பட்டால் வழித் தடங்களில் அமைந்துள்ள எங்கள் பட்டறைகள் உடனடியாகச் சீர் செய்கின்றன. எனவே தாமதம் தவிர்க்கப்படுகிறது.
- ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நேரிடையான பார்சல் சர்வீஸ் இருப்பதனால் நேரம் மிச்சப்படுகிறது. பார்சல்கள் இறக்கி ஏற்றப்படுவது தவிர்க்கப்படுவதால் சேதமும் விளைவதில்லை.
- தென்னகத்தின் பெரு நகரங்களுக்கிடையே மின்னல்வேக சர்வீஸ்களும் நடத்துகிறோம். எனவே உங்கள் பொன்னான நேரம் மிச்சப்படுகிறது.

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்
(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)
மதுரை

TVS உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்



FDS SR 1954 TMB



Agfacolor films include • Agfacolor CNS negative film, exclusively for colour prints • Agfacolor CT 18 for sharp colour transparencies.

Available both as rollfilm and 35 mm films. Easy-to-follow instructions are enclosed with every pack. Processing in India.

For information ask your nearest authorised Agfa-Gevaert dealer.



AGI

Sole Distributors:

AGFA-GEVAERT INDIA LIMITED

Bombay • New Delhi • Calcutta • Madras

® Registered Trademark of Agfa-Gevaert, Antwerp/Leverkusen. Manufacturers of Photographic Products

Simoes/AG/21